தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

ஆனந்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 13-9-58 | சனிக்கிழமை | இதழ் 13



முதல் கவிஞன்

மனிதரிலே மிக்குயர்ந்தோர் கவிஞர்.

இதயப் பூங்காவில் எழும் எண்ணப் பூக்களை வாடை குன்ருது, வரிசை தவருது, வரம்பு வழுவாது பாமாலை யாகத் தொகுத்து மககளுக்கு அளிக்கும் வள்ளல்கள் கவிகள்.

கவிகள் நாட்டின் கண்கள்.

சாதாரண மனிதனின் பார்வைக்கும், கவிஞனின் பார்வைக்கும் ஏராள மான வித்தியாசம் இருக்கிறது. உலகை, உலகப்பொருள் களைப் புதிய கண்ணேட்டத்தில் பார்ப்பவன் கவிஞன்.

கவிஞர்கள் மூன்று வகையினர்.

கடவுளைப்பற்றிப் பாடுவோர் ஒரு வகையினர். மன்னர்களைப்பற்றிப் பாடுவோர் மற்ருெரு வகையினர். மக்களைப்பற்றிப்பாடுவோர் பிறிதொரு வகையினர்.

மூவகைக் கவிஞரும் தமிழ் இலக்கிய உலகில் குடியேறியுள்ளனர். இவர்களுள் மக்களைப்பற்றிப் பாடியோரின் தலைவன் பாரதி. பாடத் தொடங்கிய முதல் கவிஞனே அவனதான்.

பாரதி, காணும் பொருள்களையெல்லாம்பற்றிக் கவி பாடினுன். மொழியைப் பாடினுன்; நாட்டு வழியைப் பாடினுன், எழிலைப் பாடினுன்; மாதர் விழியைப் பாடினுன். தத்துவங்கள் சொன்னுன்; தவித்திடும் ஏழையை எடுத்துக் காட்டினுன். சாதியைச் சாடினுன்; சழக்கரின சூதினைச் சுட்டிக் காட்டினுன. அவன சொல்லாதன இல்லை; அவன் கவிதைகளில் இல்லாதன இல்லை.

மண்டபங் கட்டியதால் மட்டுமே வாழ்ந்துவிடுபவன் உண்மைக் கவிஞன அல்ல. உண்மைக் கவிஞனுக்கு எப்போதும் வாழும் அவனது கவிதைகளே நினைவுச் சின்னங்கள். அவற்றில், அவற்றை நாள்தோறும் பாடும் மக்களின் இதயங்களில் அவன் என்றென்றும் வாழ்கிருன்.

பாரதி இந்தத் தலைமுறையின் மகத்தான மக்கள் கவிஞன. அவனுடைய கவிதைகளில் பல'சிரஞ்சீவி'த்தன்மை உடையவை.

'குயிற் பாட்டு'ம், 'பாஞ்சாலி சபதமு'ம், 'கண்ணன பாட்டு'ம் அவனை என்றென்றும் வாழ வைக்கும்.

பாரதி தமிழ் உள்ளளவும், தமிழகம் உள்ளளவும் நீடுழி வாழ்வான்.

பாரதி வாழ்க!

குற்றமற்ற கோவலன்? --ஒரு மறுப்பு

'தென்றல்' 16-8-'58 இதழில் வெளியிடப்பட்ட **'கோவலன்'** எனும் கட்டுரை, கோவலனைக் குற்றமற்றவன் எனக் காட்டியது. அந்தக் கட்டுரைக்கு மறுப்பாக இது வருகிறது.

எழுதியவர் கல்லூரி மாணவர்--இலக்கியப் பகுதியில் பயின்று கொண்டிருப்பவர்.

சிலப்பதிகாரக் கதைத் தலைவன் கோவலன் குணக்குன்று, ஒழுக்கம் வழுவா உயர் செம்மல், மாசு மறுவற்ற மாணிக்கம், வாழ்க்கையின் ஒளி விளக்கு என்று சென்ற இதழில் கோவலனுடைய குண நலன்களைப்பற்றி எழுதிய நண்பர் இலக்கிய, இலக்கணங்களால்எடுத்துக் காட்ட முனைந்தார். அவருடைய கூற்று எந்த அளவுக்குப் பொருத்தமுடையது என்பதை இங்கு காண்போம்.

கோவலன் மாதவியின் பால் கொண்ட தொடர்பு பெருங்குற்றம் என்று இன்று யாரும் கூறுவதாய்த் தெரியவில்லை. ஆயின் சென்ற இதழ் கட்டுரையாளர், அத்தகையதோர் எதிர்ப்பு இருப்பதாகக் கூறி அதனை மறுக்கத்தொல்காப்பியத்தின் துணையை நாடியுள்ளார். சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த காலத்தில் பரத்தையர் பிரிவு பெருங் குற்றம் என்று கருதப்படவில்லை என்பது உண்மை. அக்காலத்தில் வாழ்ந்த கோவலன் பரத்தையை நாடியமை அவன் குற்றமன்று. அது சமுதாயம் ஒப்புக்கொண்ட ஒருவழக்கு.காலத்தின் குற்றம். ஆயின் அக்கால இயல்பின்படியும், உலகப் போக்கின்படியும் கோவலன் ஒழுகினன் என்று கொள்ளல்தான் பொருந்துமேயன்றி அதுவே அவன் குணக்குன்று என்பதற்கு எவ்வாறு எடுத்துக் காட்டாகும். அவன் அக்காலத்திலிருந்த அந்த முறை தவறான முறை என்று உணர்ந்து தன் வாழ்வில் நிகழாவண்ணம் காத்திருந்தானேயாயின் அவனை ஒளி விளக்கு என்றோ, ஒழுக்கம் வழுவா உயர் குணச் செம்மல் என்றோ புகழ்தல் பொருந்தும்.அவ்வாறன்றி கால வெள்ளத்தின் போக்கில் இழுத்துக்கொண்டு செல்லப்பட்ட கோவலன் ஒரு சாதாரண மனிதனேயன்றி இச்சிறப்புக்களுக்குரியன்அல்லன் என்பது வெளிப்படை.

ஒத்த தலைவன் தலைவிக்கு உரிய பத்துக் குணங்களைக் கூறி, இவை பத்தும் ஒருங்கே உடையவனே சிறந்த தலைவன் என்றும் அவரே கூறுகிறார். கோவலனைப் புகழ வந்த **"மண் தேய்த்த புகழினான்"** என்ற ஒரு தொடரே இவை பத்தையும் உடையவன் கோவலன் என்பதை விளக்கும் என்பது எவ்வாறு பொருந்துமோ? நம்மால் உணரக் கூடவில்லை. மேலும் அப்பத்துக் குணங்களுள்ளும் 'நிறை' என்னும் பண்பு கோவலன் வாழ்க்கையில் யாண்டும் இருப்பதாக உணர முடியவில்லை.

பரத்தையர் மாட்டுப் பிரிந்தமை கோவலன் குற்றமன்று, அது அக்காலத்தின் குற்றம் என்று இலக்கணங் கொண்டு எடுத்துக்காட்டத் துணியும்போது தமிழ் இலக்கிய மரபையும் ஓரளவு சிந்தித்து நோக்குவது கோவலன் பிரிவு சரியென்று கூறும் கூற்றுக்கு அரண் செய்யாது. சங்க இலக்கியத்துள் பரத்தையை நாடிச் சென்ற எந்தத் தலைவனும் தன் மனைவி குழந்தையைப் பெற்ற பின்னரே பிரிந்ததாகக் காண்கிறோம். கோவலன் ஒருவனே பழந்தமிழ் இலக்கியத்துள், கண்ணகி குழந்தைப் பேறு இன்றாகத் தன் மனை நீங்கிப் பரத்தையைச் சார்ந்தான். மேலும் பரத்தையர் காரணமாகப் பிரிந்த தலைவன் மனைவியிடம் **ஆயிழை மைந்தனும் ஆற்றாமையுமே** வாயிலாகத் திரும்பி வருதல் அகப்பொருள் மரபு. ஆயின் சிலம்புத் தலைவன் கோவலனுக்குத் தன் வீட்டில் மைந்தனும் இல்லை. கண்ணகியைப் பிரிந்த ஆற்றாமையும் இல்லை. அவனுடைய மீட்சிக்குக் காரணமாக அமைந்தது மாதவி பால் கானல் வரியின்போது நிகழ்ந்த ஊடல், வெறுப்பாக உருவெடுத்தமையே ஆகும். ஆகவே அவன் பிரிவும் தமிழ் மரபுப்படிப் பிரிந்த பிரிவன்று. உளவியல் முறைப்படி வேண்டுமானால் கோவலன் புரை தீர்ந்தவன் எனக் கணிக்கலாம். மறுபடியும் கூடிய கூட்டமும் அகப்பொருள் இலக்கணத்துக்குட்பட்ட கூட்டமன்று. இவை கோவலன், தொல்காப்பியம் நுவலும் பத்து குணங்களும் ஒரு சேரப் பெற்றவன் அல்லன் என்பதை விளக்கும்.

கோவலனுடைய பெருமையைப் பேசவந்த கட்டுரையாளர், தமிழ் இலக்கணம் கூறும் பரத்தையின் நிலையில், கலைச்செல்வி மாதவியை வைத்துப் பேசியமை அவர் மாதவியின் பண்பு நலன்களை முற்ற உணரத் தவறினார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. 'இழவோனையும் இழத்தியையும் இகழும்தன்மையும், தன்னையே புகழ்ந்துகொள்ளும் தன்மையும் உடையவள் தமிழ் இலக்கணம் காட்டும் காமக் கிழத்தி. 'ஆடலும் பாடலும் வல்லளாகி, அழகும் இன்பமும் காட்டி, இன்பமும், பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காத' இயல்பினள் அகப்பொருள் இலக்கணத்தில் நாம் காணும் பரத்தை. தன்னைப் பிரிந்து வருத்தியபோதும், கோவலனைப் புகழ்ந்ததன்றி வேறு கூறாதவளும், கற்பின் செல்வி கண்ணகியின் மகள் மணிமேகலை என்று கூறுவதன் வாயிலாகக் கண்ணகியின் பெருமை உணர்ந்து போற்றியவளும், தன் இனத்தையும்,தன்னையும் குறைத்துக் கூறிக் கொண்டதன்றிப் புகழாதவளுமாகிய பண்பின் சிகரம் மாதவி எங்ஙனம் பரத்தையின் நிலைக்குப் பொருந்துவாள்? என்றும் கோவலன் ஒருவனையே பற்றுக்கோடு எனஎண்ணி வாழ்ந்த அவள் பரத்தையாயின் வேறு யார் இங்குக் கற்பரசியாவர்? அவன் அன்பன்றிப் பிறபொருள் எதையும் எதிர் நோக்காத மாதவி எத்தன்மையாலும்பரத்தையல்லள். இளங்கோவடிகளும் கண்ணகி, கோப்பெருந்தேவி முதலிய கற்பரசிகளுடன் மாதவியையும் வைத்து எண்ணியமை இதையே விளக்கும். ஆகவே மாதவியின் உறவைக் கோவலன், பரத்தையின் உறவு என்று கூறிப் பிரியும் நிகழ்ச்சி அவனுடைய எதையும் சிந்தித்து நுணுகி நோக்கும் மனப்பாங்கின் முழுமையற்ற தன்மையையே புலப்படுத்துகிறது.

முதற்கண், கோவலன் கானல் வரிப் பாடல் ஒன்றினை தான் வேறொருத்தியை எண்ணிப் பாடும் குறிப்புப் புலப்படப் பாடினான். அது கேட்ட மாதவி **'மன்னுமோர் குறிப்புண்டு. இவன் தன்னிலை மயங்கினான்'** என்று கூர்த்த மதியினாலும், அமைந்த பண்பினாலும் உணர்ந்து தானும் அதே போக்கில் பாடி அவனுக்கு இன்ப வேதனை அளிக்க எண்ணிப் பாடினாள். ஆனால் அப்பாடலைக் கேட்ட கோவலன், அவளுடைய உள்ளயுணர்வறியானாகி **"மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்"** என்று கூறி அதனைக் குற்றம் எனக் கொண்டு பிரிகிறான். தன்னுடைய இந்தச் சொற்களும், செயலும், கண்டு இரங்கி, அவளை நாடிவந்தவனல்லன். தன் அறியாமையால் மாதவிபால் அவன் கொண்ட ஐயம் விரட்ட,வந்துகண்ணகியைக் காண்கிறான். ஆகவே அவனுடைய அன்பும் குறையுடையதேயாகும்.

அவன் பிரிந்த பின்னர் மாதவி விடுக்கும் ஓலையும் அதற்கு அவன் அளிக்கும் பதிலும், அது கேட்ட மாதவியின் நிலையும், மாதவியின் பெருமையையும், அன்பின் திறத்தையும் விளக்குவதோடு அவனுடைய தகுதியைக் குறைப்பதாகவும் அமைந்திருக்கிறது. பலவகை வரிக்கூத்தும் 'ஆடல் மகளே ஆதலின் ஆயிழை பாடுபெற்றன அப்பைந்தொடி தனக்கு' என்று, முன்னர் அவன் இன்பத்திற்கும், சுவைக்கும் அவளால் பயன்படுத்தப்பட்ட அவ்வாடற் கலையினையும், அவளது பண்பினையும் பழிக்கிறான். வயந்த மாலையின் வாயிலாக இப்பழிச் சொற்களை அறிந்த அவள் அன்பு மாறினாளில்லை; வெறுத்தாளில்லை. மாறாக **'மாலை வாராராயினும், மாணிழை காலை காண்குவம்'** என்கிறாள். அது அவளுடைய அன்புள்ளத்தின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் அவள் **கையறுநெஞ்சமொடு பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்'** மாதவியின் இந்த மாதவிக்கு கோவலன் ஏற்ற துணைவன் நிலையை முற்ற எய்தப் பெறவில்லை என்பதைச் சுட்டுகின்றன. அவ்வாறு அவள் பாடியமை எவ்வாற்றானும் குற்றம் அன்று. குற்றமெனக் கொண்டாலும் அதை முதலில் செய்து காட்டிய குற்றவாளி அவனேயன்றோ? ஆயின் அவன் இங்குத் தன் குற்றம் காணத் திறனற்ற, பிறர் குற்றமொன்றையே காணும் பெற்றியுடையனாக நமக்குக் காட்சியளிக்கிறான்.

அவன் கண்ணகியிடம் சென்று **"சலம்புணர்க் கொள்கைச் சலதியோடாடிக் குலந்தருவான் பொருள் குன்றம் தொலைந்த இலம்பாடு"** என்று கூறி மாதவியைப் பழிப்பது முழுமையற்ற, நிறைவுற்ற நெஞ்சப் பாங்கினையே எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு இவன் தன் குற்றத்தினும் மாதவியைப் பழித்தலே குறியெனக் கொண்டிருக்கும் தன்மையால் இவன் கண்ணகி மாட்டுச் செலுத்தும் அன்பும் உண்மை அன்போ அன்றிக் கட்டுரை வன்மையால் காட்டப்படும் ஒன்றோ என்றே நாம் ஐயுற வேண்டியிருக்கிறது. ஏனெனில் இவன் கண்ணகியின் நிலை நிலை, கோவலன் குணக்குன்று எனக் கோடற்குத் தடையாக உள்ளது.

அடுத்து, அவர் 'கோவலன் - கண்ணகி மணவாழ்க்கை மிகவும் சிறந்திருந்தது. அதற்கு எடுத்துக்காட்டு கோவலனுடைய குறியாக் கட்டுரையாகும். சிலர் அவர்கள் இருவர்க்கும் உறவு சரியாக இல்லை என்று கூறுவர். அது தவறு' என்று கூறி அடுத்த சில வரிகளிலேயே அவர்கள் கூடிக்குலவிப்பெற்றது உடலின்பம் மட்டுந்தான். உள்ளம் அந்த நிலை எய்தவில்லை என்பது அவர்களுடைய பிரிவு நமக்கு எடுத்துக் காட்டுகிறது என்று முடிக்கிறார். என்னே முரண்பாடு, ஏன் வந்தது இப்பிழைபாடு? **"யாண்டு சில கழிந்தன இப்பெருங்கிழமையின், காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென்"** என்கின்ற பாடல் வரிகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அவர்கள் இல்வாழ்க்கைச் சிறப்புற்றிருந்தது என்று துணிவது திறனாய்வின் குறைபாட்டையே உணர்த்துகிறது. நாம் கண்ணகியின் வாய்மொழியாலேயே.

"அறவோர்க் களித்தலும்,
அந்தணர் ஓம்பலும்
துறவோர் எதிர்தலும்,
தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்
இழந்த என்னை"

என்ற கூற்றினைக் காட்டி, அவர்கள் இல்வாழ்க்கை சிறப்புற நடக்கவில்லை என்பதைக் கூற விழைவோம்.

எத்தன்மைக் குறைகள் இருந்தபோதிலும் கோவலனிடம் பிறரைக் கவரும் தன்மைத் தான சில குணங்களும் இருந்தன. அவை

— 3ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 ‖ 13—9—58 ‖ இதழ் 13

பாரதி செய்த பாவம்!

தூங்கிக்கிடந்த சமுதாயத்தைத் துள்ளி எழவைத்த தூயவனே! நீ வாழ்க!

பாதை மறந்த பாமரர்களைப் பக்குவமான போருக்குத் தயாராக்கிய பண்பினனே! நீ வாழ்க!

உலகம் உள்ளளவும் உன் பெயர் உலவும்; தமிழன் உள்ளளவும் தரணி உன் புகழ் பாடும்.

செயற்கரிய செய்தனை—

செந்தமிழ்க் குலத்தைச் செழிக்க வைத்தனை!

வாழக் கூறினை; வாழ்ந்துகாட்டினை!

சாதி, மதங்கடந்த 'சமரச' உலகிற்குப் புதிய வழிவகுத்தனை!

நீ யாராயிருந்தால் என்ன?

நீ கவிஞன்; தமிழ்க் கவிஞன்!

எனக்கு அதுபோதும்!

பணக்காரர்களின் பொய்களுக்கிடையே, ஏழைகளின் உண்மைகள் மறைந்து கிடந்தன—

ஆதிக்க வெறியர்களின் கழுகுக் கால்களுக்கிடையே அன்புருவான விடுதலைப்பசி அடங்கிக் கிடந்தது—

மதவாதிகளின் ஆசனமான புலித்தோல்-அல்ல அல்ல! அது புலித்தோலல்ல; தாழ்த்தப்பட்ட குலத்தவனின் தமிழ்த்தோல் - மடமைகளுக்கு விரிக்கப்பட்ட பஞ்சணையாகக் கிடந்தது.

பெரிய சாதிக்காரனின் ஆணவத்தில், பிற சாதியினரின் உரிமை எண்ணங்கள் சிதைந்துகிடந்தன-

நாடு, சிலருக்கு வீடாயிற்று; பலருக்குக் காடாயிற்று.

'சும்மாயிருப்பதே சுகம்' என்ற தத்துவம் இந்நாட்டின் பொதுக் கொள்கையாயிருந்தது.

அன்று...நீ மட்டுமே இவற்றைக் கண்டாய்.

"மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?" என்றாய்.

"துருக்கர் இளம்பிறை"யும் பொறித்த கொடி காட்டினாய்.

"சூத்திரருக்கொரு நீதி; தண்டச்சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி"யா? என்றாய்.

"நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என முழங்கினாய்.

"சிப்பாயைக் கண்டஞ்சு" வோரைச் சாடினாய்.

அன்று உனக்கிருந்த துணிவு எவருக்குமில்லை.

கவிஞனே! நீ வீரன்!

தமிழனே! நீ தத்துவஞானி!

பிறர் பேசியதைப் பின்பற்றிப் பேசவும் அஞ்சியோரிடையே நீ சொந்தமாகப் பேசினாய்!

தமிழர்கள் எதற்கும் தகுதியற்றவர்கள்.

பொய்க்கதைகளிலும் சலசலப்புக் காட்டி மறைவதிலும் இவர்களுக்குள்ள ஆசை மிகப் பெரிது! இதை எடுத்துச் சொல்பவனே இவர்களது முதல் விரோதி!

நீ இவர்களின் ஆதிமுதல் பகைவன்!

பாரதி!

இன்று நீ இல்லையே!

இன்று நீ வா! தமிழர்களைப் பார்!

இப்படி ஒரு கேடுகெட்ட சமுதாயம் உலகில் எங்காவது உண்டா?

இவன் தொட்டதெல்லாம் தோல்வியடா!

பாரதி! என் ஆசையும் கவலையும் என்ன தெரியுமா? நான் ஏன் ஒரு தமிழனாகப் பிறந்தேன்?

ஒரு ரஷ்யனாக-அமெரிக்கனாக-எகிப்தியனாக-அட, ஒரு வங்காளியாக-மராத்தியனாக-குறைந்த அளவு குசராத்தியனாகப் பிறந்திருக்கக்கூடாதா?

அவர்களுக்கெல்லாம் இனஉணர்ச்சி அதிகமடா!

இங்கே, அண்ணன் நாடுகாக்க எழுந்தால், பகைவன் பேசாமலிருக்கிறான்; தம்பிதான் கேலி செய்கிறான்!

அடா பாரதி!

நாம் இருவரும் ஒரே வகைக் குற்றவாளிகள்!

நாம் ஏன் மானங்கெட்ட - சூடற்ற - சுரணை அற்ற தமிழர்களாகப் பிறந்தோம்?

இலங்கையிலும் மலேயாவிலும் பர்மாவிலும் செத்துக்கொண்டிருக்கிற சாதியில் ஏன் பிறந்தோம்?

நாம் செய்த பாவங்களிலேயே தலையாயது இது!

நீ ஆங்கிலனாகப் பிறந்திருந்தால் உலகம் முழுதும் உன்னை அறிந்திருக்கும்!

தமிழனாகப் பிறந்து தொலைத்ததால், ஐம்பது மோட்டார்களில் உன்னை விளம்பரப்படுத்த வேண்டியிருக்கிறது!

இங்கு வாழ்வதைவிட நீ இறந்ததே நன்று!

நான் இருந்து சாதிப்பதைவிட நீ இறந்து சாதித்தது அதிகம்!

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

அவனுடைய கலையார்வமும், கலையில் அவன் கொண்ட ஈடுபாடுமே யாகும். அக்கலையுணர்வு காரணமாகவே அவன் மாதவியை நாடினான் என்பது வெள்ளிடை மலை. எல்லோரும் ஒப்பும் உண்மை. ஆனால் அன்பர், அவன் மாதவி பால் கொண்ட தொடர்புக்குக் குழந்தைப் பேறின்மை என்கின்ற புதியதோர் விந்தைக் காரணத்தைக் கூறுகிறார். திறனாய்வும் பயனற்றதாகிறது.

கோவன் ஒரு தூய தலைவனாகக் காட்ட வேண்டுமென்று இளங்கோ வடிகளே முயலவில்லை. பல குறைகளும், சில குணங்களும் உள்ள ஒரு தலைவனை அமைத்துக் கொண்டு பெண்டின் கற்பின் திறம் விளக்கிக் காவியம் பாடுதலே அவர் குறிக்கோள். கோவலன் தன்னைப் பற்றிக் கண்ணகியிடத்தில் கூறும் பொழுது,

> "வறுமொழியாள ொடு
> வம்பப் பரத்தரொடு
> குறுமொழி கோட்டி
> நெடு நகைபுக்குப்
> பொச்சாப் புண்டு
> பொருளுரையாளர்
> நச்சுக் கொன்றேற்கு
> நன்னெறி யுண்டோ?
> இருமுது குரவர் ஏவலும்
> பிழைத்தேன்
> சிறு முதுக் குறைவிக்குச்
> சிறுமையும் செய்தேன்"

என்று தன் குற்றங்களை ஒப்புக் கொள்கிறான். இங்கு இளங்கோவடிகள் தான் படைத்த கதா பாத்திரத்தைச் சிந்திக்க வைத்து, தான் செய்த குற்றங்களை உணருமாறு செய்யும் தன்மை விளங்குகிறது. மேலும் அவர் நேரடியாகவே அவனைச் சராசரி மனித உணர்ச்சி உடையவனாகக் காட்டும் இடமும் உண்டு. இந்திர விழாவில் வீசிய மலய மாருதத்தைப் பற்றிக் கூறும் பொழுது, 'பூங்கோதைப் பிணையல் பொலிந்தும் பொழிலாட்டமர்ந்தும், புதுமணம் புக்கும், நன்மொழி புக்கும் ஓரிடம் நில்லெருமல் வருகின்ற மாருதம், குரல் வாய்ப்பானரொடு, நகரப்பரத்தரொடு திரிதரு மரபிற் கோவலன்போல வீசியது' என்று அவனுடைய நிலைபேறற்ற தன்மையை வெளிப்படையாகக் கூறுகிறார். இதனினும் தெளிவாக வேறு எங்ஙனம் கூறுதல் இயலும்? இச்சிறப்புக்களைத்தான் அன்பர் குணக்குன்றென்றும், மாசற்ற தன்மை என்றும், மங்காத ஒளியென்றும், ஒழுக்கம் வழுவாச் சிறப்பென்றும் கூறுகிறார் போலும்! செல்வக்குடியில் பிறந்து வாழ்க்கை வசதிகள் குறையறப் பெற்றிருந்த கோவலன் தன் உணர்ச்சிக்கும், கலைப்பற்றிற்கும் ஏற்பச் சிறிது அறிவுவழிச் செயலாற்றும் தன்மையும், உறுதிபடைத்த உள்ளமும், நேர்மைத்திறனும், வாழும் வகையும் அறிந்து போற்றிருந்தால் சிறந்ததொரு வாழ்க்கை வாழ்ந்து காட்டியிருக்கலாம். ஆனால் அவை இன்மையால் நடந்தது என்ன? சிறந்த பெற்றோருக்குப் பிறந்தான். அவர்களை மகிழ்விக்கத் தன் கடமையைச் செய்ய மறந்தான். கற்பின் செல்வி கண்ணகியை மணந்தான். குறை வாழ்வே வாழ்ந்து அவளையும் துறந்தான். கலையரசி மாதவியை அடைந்தான். அவள் வாழ்க்கையிலும் நிறைவேற்படுத்தாமல் பிரிந்தான். பின்னர் மதுரையை அடைந்தான். ஐயகோ! முறை வழுவாப் பாண்டியன் செங்கோல் முறை பிறழ்ந்தது. பாண்டியன் நீதிக்குப் பழிசேர தானும் கொலையுண்டான். அப்பழியைத் துடைக்கப் பாண்டியன் உயிர்நீத்தான். அவன் தேவியின் வாழ்வும் போயிற்று. மதுரையும் மாண்பிழந்தது. குறையுடைய அவனுடைய வாழ்க்கை இத்தனைக்கும் இடமளித்த நிகழ்ச்சிகளின் குறை தாயகமாகத் திகழக் காண்கிறோம்! அவனுடைய வாழ்வில் எங்கும் அமைதியும் இல்லை. நிலைபேறுமில்லை. ஆகவே இந்த வாழ்க்கை, உணர்ச்சி வழிச்செயலாற்றித் தோல்வி கண்ட ஓர் மனிதனின் சிறந்த படப்பிடிப்பு. இதனின்று நாம் பெறவேண்டிய பாடம் பல உண்டு. படிப்பினை உண்டு. ஆனால் அவன் சராசரி மனிதனுக்கு இருக்கும் குறைபாடுகளின் தலைவனாகவும் காட்சியளிக்கிறான் என்பதை எந்தத் திறனாய்வாளரும் உணரற்பாலதொன்றாகும்.

-வே. கோபாலன்.

திருத்தம்

பாரதியைக் கண்டேன் என்னும் கவிதையில் 4-வது பாராவில், "ஏற்ற முறைத்தயான்" என்றிருப்பது "ஏற்ற முரைத்தயான்" என்றிருக்க வேண்டும்.

ராஜபால் பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: R. சங்குபிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

வெண்பாப் போட்டி-26.

ஈற்றடி :

பூசிப்ப துஞ்சுத்தப் பொய்.

முடிவு தேதி 20-9-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

சாவே, நீ வா!

ஹங்கேரி விடுதலைப் போரில் ஈடுபட்ட என்னைக் கைது செய்து காவலுக்குள் வைத்துவிட்டனர். எழுச்சியுற்ற மக்கள் வெள்ளத்தை அணைபோட்டு தடுத்து விடலாம் என்ற எண்ணத்தோடு, காலை சுமார் 6 மணிக்கு எனக்குச் சிறை வாசம் அளிக்கப்பட்டது. தூசியும் அழுக்கும் நிறைந்து வௌவால் வசிப்பதற்குக் கட்டப்பட்ட அந்தச் சிறைச்சாலையின் சிறிய அறையினுள் ஜன்னலின் வழியாக வந்த சூரியனின் ஒளி சிறை அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்ட என் உடலுக்குச் சிறிது குளுமை அளித்தது. கம்யூனிஸ்ட் அரசாங்கத்தில் ஏன் என்று கேட்போரும் 'எதற்கு' என்று வினு எழுப்புவோரும் குரூரமாகச் சித்ரவதை செய்யப்பட்டதை அன்றுதான் என் கண்களால் பார்த்தேன். வயோதிகப் பருவமானாலும் வாழ்வு தரப்படவேண்டும் நமது நாட்டிற்கு என்ற எழுச்சியின் காரணமாகச் சிறை புகுந்தேன். பொங்கி எழுந்த மக்கள் சக்தியை அடக்கிவிடலாம் என்று நினைப்பது புகைவிட்டு கிளம்பும் எரிமலையைத் தண்ணீர் விட்டு அணைக்க முயலுவதற்கு ஒப்பாகும் என்று எனக்கு நன்ருகத் தெரியும். மக்கள் சக்தியின் வலிமையை பிரஞ்சுப் புரட்சியிலும் ரஷ்ய புரட்சியிலும் கண்டு அதை செயலாக்கத் துடித்து நின்ற என் நாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குத் துணையாக நின்றேன். ரஷ்ய ஆதிக்கத்தையும் அதன் யதேச்சதிகாரப்போக்கையும் முறியடித்து விடவேண்டும் என்று முழுமூச்சில் ஈடுபட்டிருந்ததால் எனக்கு அந்த பரிசு கிடைத்தது. விடுதலைப்போரில் ஈடுபட்ட என்னை ரகசியமாகச் சுட்டுக்கொல்லுமாறு சிறை அதிகாரிகளுக்கு உத்திரவிடப்பட்டதை இன்று பகல் 12 மணிக்குத்தான் என் தோழர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். டாங்குகளும் பீரங்கிகளும் பாட்டாளிகளின் சொர்க்கபூமி என்று கூறப்படும் ரஷ்யாவிலிருந்து ஹங்கேரிக்கு இறக்கப்பட்டதாக எனக்கு செய்தி கிடைத்தது. என்னுடன் போராட்டத்தில் குதித்த தோழர்களுக்காக ஒரு துளி கண்ணீர் என் கண்களிலிருந்து வழிந்தது. இரும்புக்கவசமணிந்த ராணுவ வீரர்கள் கையில் துப்பாக்கியுடன் தெருவில் வருவோர் போவோரைச் சுட்டு வீழ்த்துவதாகக் கேள்வி. நாட்டின் எதிர்காலத்தை பொற்காலமாக்குவதற்கு உற்ருரையும், உறவினரையும், உயிரையும் பொருட்படுத்தாது 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' எனப் புரட்சிப் பண்பாடி போர்க்களத்தில் புகுந்த என் ஆருயிர்த் தோழர்களைப் புத்துலகச் சிற்பிகளை எண்ணி ஆனந்தக் கண்ணீர் வடித்தேன். இன்னும் 14 மணி நேரத்தில் நான் இந்த உலகை விட்டே போய்விடுவேன். இறந்த கால நினைவுகளை எண்ணிப் பார்ப்பதன் மூலம் சிறிதளவு ஆறுதல் பெறலாம் என்று எண்ணிக் கொண்டு நிகழ்ச்சிகளின் அரவணைப்பில் தூங்கிக்கொண்டிருந்தேன்.

சிறைக்கதவு திறக்கப்பட்டது. இரண்டு போலீஸ்காரர்கள், சுமார் பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு வாலிபனை நான் இருக்கும் அறையில் இழுத்து எறிந்துவிட்டு போய்விட்டனர். இரக்கமற்றபோலீஸாரின் அரக்கக் குணத்தைக்காண்பிப்பதற்காக அவன் உடலெங்கும் சவுக்கடி தழும்புகள் இருந்தன. விடுதலை பெற்ற என் நாட்டு மக்களைப் பார்ப்பேனே ஒழிய பிறர் உழைப்பில் சுகம் காணும் இந்த பொல்லாத அரசாங்கத்தைக் காண மாட்டேன் எனச் சொல்வதுபோல் அவன் விழிகள் மூடியிருந்தன. எழுச்சியுற்ற சமுதாயம் நசுக்கப்பட்டதுபோல் அவனது மூக்கிலிருந்து ஒழுகிக்கொண்டிருந்த ரத்தம் மேல் உதட்டின் விளிம்பில் தேங்கியிருந்தது. வாழவேண்டும் எனக் கூக்குரலிட்ட அவனைச் சாவிலே கண்டு கொள் அதை என்று கூறி அவன் சரீரத்தைச் சதைத்துண்டுகளாக்கினர். அந்தப் பொதுவுடைமை வாதிகள். பாட்டாளிகளின் பாதுகாவலர்களால் பயங்கர சித்ரவதைக்கு ஆளான அவனது உடல் பார்ப்பதற்கு ஒரு குஷ்டரோகியின் உடல் போல் காட்சியளித்தது. விக்கமடைந்திருந்த அவனது விரல்களையும் கால்களையும் தொடுவதற்கே எனக்குப் பயமாக இருந்தது. மூலையில் இருந்த குவளைத் தண்ணீரை எடுத்து அவன் முகத்தில் தெளித்தேன். மயக்கம் இன்னும் சரியாகத் தெளியவில்லை. சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு அனுதைக் கொள்ளைக்காரனின் பிணம்போன்று அவனது உடல் அங்கே கிடந்தது.

திருமணமாகி ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையான நான் நாட்டை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டது அவ்வளவு பெரிய தியாகமல்ல. இதோ இந்த இளைஞன்! யார் பெற்ற மகனே இன்று நாதியற்றுக்கிடக்கிருன். பருவம் என்னும் சோலையில் அழகு என்ற பெண்ணேடு இன்பம் என்ற கனியைப் பறிப்பதற்கு இளைஞர்கள் துடிதுடித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இவனைப்போல் ஒரு இலட்சியவாதியை...நான் கண்டதில்லை என் வாழ்வில், கல்லூரி வாழ்க்கையின் இனிமையை அனுபவிப்பதே பிறவியின் பயன் என ஒரு பேரறிஞன் கூறுகிருன். ஆனல் இவனே வீட்டைத் துறந்து வீரஉலா வந்து விட்டானே விடுதலைப் போர்க்களத்தில்என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தண்ணீர், தண்ணீர் என்று சத்தம் கேட்டது. குவளையில் மிச்சம் இருந்த தண்ணீரை அவன் வாயில் சிறிது, சிறிதாக ஊற்றினேன். மயக்கம் தெளிந்து எழுந்தான். எழுந்து உட்கார முடியாதபடி பயங்கரமாக வீங்கிப்போயிருந்த அவன் கால்கள் தடை செய்தன. அவன் படுத்துக்கொண்டே என்னிடம் சில கேள்விகள் கேட்டான்.

"நான் மயங்கிக்கிடக்கும்பொழுது என் வாய் ஒன்றையும் வெளியிட்டு விடவில்லை அல்லவா?"

"இல்லை."

"அப்படியானல் நான் என் தலைவனைக் காட்டிக்கொடுக்கவில்லை. அவர் இன்னும் உயிரோடு இருப்பார். வலிமை பொருந்திய பீரங்கிகளையும், துப்பாக்கிகளையும் எதிர்க்கும் பொருட்டு என்னைப்போன்ற இலட்சியவாதிகளை ஊக்குவிப்பதில் ஈடுபட்டிருப்பார். வாழ்க அவர் புகழ்! வாழ்க என் நாடு" வெளிரிப்போன அவன் கண்களில்கூட நம்பிக்கையின் ஒளி துல்லியமாக பிரகாசித்தது.

"நான் இறந்து விட்டாலும் என்னைப்போன்று ஆயிரமாயிரம் இளைஞர்கள் விடுதலை கீதமிசைப்பார்கள். வீணர்கள் சர்வாதிகாரத்தைப் பொடிப்பொடியாக்குவார்கள் வாழ்க அவர்கள் புகழ்" மீண்டும் இப்படி பேசினுன் அவன். ஆர்வமிகுந்த அந்த இளைஞன் போல் ஆயிரம்பேர் இருந்தால் அத்தனை எதிர்ப்பு சக்திகளையும் தவிடுபொடியாக்கலாம் என்று என் மனம் எண்ணியது. சிறைக்கதவு மறுபடியும் திறக்கப்பட்டது. அவனை மீண்டும் இழுத்துச்சென்ருர்கள். சிறிதுநேரத்தில் சவுக்கடியின் பயங்கர வாதனை அதைத் - தொடர்ந்து அந்தபோலீஸ் அதிகாரியின் குரல்-கர்ண கடூரமாக ஒலித்தது.

"எங்கேயடா உன் தலைவன். அவன் இருக்குமிடத்தைச் சொல்லிவிடு. இல்லையேல் அறுந்துபோன நரம்புகளுடன் முறிந்துபோன எலும்புகளுடன், உன் வாழ்க்கையின் அத்தியாயத்தைத் தொடரப் போகிருய்?"

அதையும் மீறி அந்த இளைஞன் கத்தினுன்.

"என் வாயைத் தைத்துவிடுங்கள். என் தலைவனின் இருப்பிடத்தை சொல்கிறேன்?"

கொடுமைகளையும் துன்பங்களையும் கண்டு பழகிப்போனவன் போல் அவன் பேசினுன். இரும்பாகிப்போன இதயத்தோடு அல்லவா விடுதலைப்போரில் இறங்கியிருக்கிருன். விடுதலை, விடுதலை என முழக்கமிட்டு தோள்தட்டி கிளம்பி, தூங்கிக்கிடக்கும் மக்கள் தானே என எண்ணிய கொடுங்கோலர்களைச் சுக்குநூருக்கிய மக்கள் சக்தியின் மாண்பை வரலாறு மூலம் படித்தவன்போல் அவன் பேசினுன். தோல்வி கண்ட சிறையதிகாரிகள் மீண்டும் அவனை என் அறைக்குள்ளே தள்ளிப் பூட்டினர். அந்த வயதில் அவன் காட்டிய பொறுமையும், அஞ்சா நெஞ்சமும், வீர உணர்ச்சியும் என் நரம்புகளுக்குச் சூடேற்றியது. மறுபடியும் அவன் என்னிடம் கேட்டான்:

"தற்கொலை செய்துகொள்வது பாபமா?"

"தற்கொலை செய்வதுபோல் கோழைத்தனம் உலகில் ஒன்றுமில்லை. துன்பங்களைச் சமாளிக்கவும் எதிர்க்கவும் சக்தியில்லாத கோழைகள்தான் தற்கொலைசெய்துகொள்வார்கள்" என்றேன் நான்.

தமிழாக்கம்:
ஜோசப் பெஸ்கி பி. ஏ.

"தற்கொலையின் மூலம் நாட்டிற்கு நல்ல விமோசனம் ஏற்படும் என்று நம்பினுல் தற்கொலை செய்வது தவறல்ல" அவன் இப்படி பேசினுன். அவன் மீண்டும் சொன்னுன்.

"எனக்குப் பயமாக இருக்கிறது. எங்கே என் தலைவனை என் வாய் தெரியாமல் காட்டிக் கொடுத்து விடுமோ என்று"

"மன உறுதியுள்ள இளைஞன் நீ. வீணுக ஏன் பயப்படுகிருய். உன் மேல் உனக்கு நம்பிக்கை நிறைய இருக்கிறது. போய்ப் படுத்து நிம்மதியாகத் தூங்கு. காலையில் பேசிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு நான் ஜன்னலுக்குக் கீழே படுத்துக் கொண்டேன். "என் தலைவனை என் வாய் காட்டிக் கொடுத்தாலும் கொடுத்துவிடும்" என்று மீண்டு மீண்டும் அவன் புலம்பிக்கொண்டேயிருந்தான். மறுநாள் காலைஎன்னைச் சுட்டுக் கொல்வதற்காகச் சிறையதிகாரர்கள் என்னை எழுப்பிஇழுத்துக் கொண்டு போனுர்கள். இளைஞனைக் காணுமல் பதறிப் போயிருந்த எனக்கு அப்பொழுதுதான் தெரிய வந்தது, அந்த இளைஞன் சிறை ஜன்னல் கம்பியில் தூக்குப்போட்டுத் தன்னை மாய்த்துக்கொண்டான் என்று. அதிகாலையில் அவன் பிணத்தைச் சிறையதிகாரிகள்புதைத்துவிட்டனர் என்ற தகவலும் எனக்குத் தெரிய வந்தது. எனக்காகத் தயாராக இருந்த சவக்குழியைநோக்கி நான் நடந்து சென்றது எனக்கே புரியவில்லை!

குலத் தொழில்!

ஒரு பிராமணப் பையன் தனது விளையாட்டு வண்டி தெருவிலே ஒடிந்து போனபடியால், அதைப் பார்த்து அழுதுகொண்டு நின்ருன். அதைக் கண்ட ஒரு சிப்பாய்: "குழந்தாய், ஏன் அழுகிருய்?" என்று கேட்டான்:

"வண்டி ஒடிஞ்சு போச்சு" என்ருன் பையன்.

"இதற்காக அழாதே. வீட்டிற்குப் போ. உன்னுடைய தகப்பனுர் அதைச் செப்பனிட்டுக் கொடுத்து விடுவார்."

"எங்கப்பா சாஸ்திரியார், அவராலே வண்டியை நேர்ப்படுத்திக் கொடுக்க முடியாது. அவருக்கு ஒரு தொழிலும் தெரியாது. யார் வீட்டிலாவது அரிசி கொடுத்தால் வாங்கிக் கொண்டு வருவார். வேறு ஒரு இழவுந் தெரியாது" என்று விம்மி, விம்மியழுதான். சிப்பாய் சிரித்துக்கொண்டே போய் விட்டான்.

—பாரதியார் (கதைகளில்.)

வானவெளி வீதியிலே
பாரதியைக் கண்டேன்
வைத்தவிழி வாங்காமல்
வார்த்தபடி நின்றேன்
மோனவெளி வீதியிலே
முச்சடங்கி நின்ருன்,
மூன்றுதமிழ் ஆய்ந்தகவி!
முன்நடந்து சென்றேன்.

கூனலிளம் வெண்ணிலவின்
குளிர்முகத்து நடுவே
குத்துகிற மீசையையும்
கூர்விழியும் கண்டேன்
தேனமுகப் பாவலனின்
சிந்தையிடை ஏதோ
தீராத துன்பநிலே
சிந்துவதைக் கண்டேன்.

வேறு

யான் :

ஏடா பாரதி! என்னடா சுகமா?
என்ன சிந்தனே? எதிலே நாட்டம்?

பாரதி :

வாடா தம்பி! வாழ்கநீ பாண்டியா!
வாட்ட முகத்தின் நாட்டம் கேட்டியோ?
பாடா இயற்கை பாடுதல் கேட்டுப்
பாடிப் பாடி நான் படைத்தவை பற்பல!
வாடா மலர்களே வழங்கினேன் எனினும்
வாடி வாடிநான் மறைந்ததை அறிவாய்!

இன்று மண்டபம் எழிலுறக் கட்டுவர்
இருப தாயிரம் பேர்கள் திரட்டுவர்
கொன்று போட்டுஎன் பிணத்தினி லேறுவர்
கொட்டு முரசெனப் பாடல்கள் பாடுவர்
அன்று சோற்றுக் காதர வானவர்
ஆருமில்லே! அடா இவர் உன்னேயும்
தின்று தீர்த்தபின், தேமது ரத்தமிழ்
செய்த வன்எனத் திருவிழாக் கூட்டுவர்!

இந்த மூடரின் ஏற்ற முறைத்தயான்
ஏர்பி டித்தொரு நிலத்தை உழுதனே?
மந்த புத்தியில் மன்னவர் நந்தமிழ்
மாந்தர்! தம்பி! நீ இவர்களே நம்பியே
சொந்த வாழ்வினேத் துறந்தொரு காரியம்
துளியும் செய்ய வேண்டுவ தில்லேகாண்!
எந்த நாளிலும் தமிழன் என்பவன்
இளித்த வாயனுய் இருப்பதே புண்ணியம்!

வாழ்ப வர்க்குச் சோறு தராதவன்!
மாண்ட வர்க்கு மண்டபம் கட்டுவோன்
ஆள்ப வர்க்குத் துதிபல பாடுவோன்
அச்ச மென்பதன் அரும்பெறல் மைந்தனும்!
சூழ் கடற்புவி தனேஇவன் முன்னேயர்
துளேத்த காதையைச் சொல்வத லாலொரு
வாளெ டுக்கும் திறனுமில் லாதவன்
வம்பெ தற்கென ஒதுங்கியே செத்தவன்!

அன்றி லங்கையை ஆயிர மாயிரம்
ஆனே தானேகள் வென்றதைச் சொல்லுவான்!
இன்றி லங்கையில் ஆதர வற்றவன்
இன்ன வன்துணேத் தம்பிய ரல்லரோ?
இன்னும் இந்தத் திசைகள் எட்டினும்
இழிந் திருப்பவன்; தமிழர் திருமகன்,
வென்றி கொண்ட வீரரின் பிள்ளேயாம்!
வீணர் சொன்ன பொய்மைக் கதையடா!

இருவர் சேர்ந்தங் கொருவரை மற்றவர்
ஏற்றிப் பாடும் "பரஸ்பர முகஸ்துதி"
தரும மானது தமிழரின் நாட்டினில்!
தம்பி நீ இவர் தலேகவிழ்ந் தாரெனப்
பொறுமிச் சாவதும் போர்செயச் செல்வதும்
பொருத்த மற்றதுன் பெற்றவர் உற்றவர்
கரும மட்டும் கணக்கினி லேற்றுவாய்
கண்கள் மூடுமுன் கவலேகள் மாற்றுவாய்!

யான் :

சோர்ந்து கூறும் சொற்களோ பாரதி?
தூய தேன்தமிழ்ப் பாவினம் பற்பல
ஆய்ந்து வைத்தவன், அன்னேயின் நாட்டினர்
அடிமை தீர்த்திடும் போர்முர சானவன்
வேய்ந்த கூறையாய் வெள்ளொளிக் கைகளாய்
வீர நாட்டினேக் காக்கத் துடித்தவன்
தேர்ந்த பாவலன் செந்தமிழ்ச் சாரதி
சிந்தை நொந்தியோ, செப்படா பாரதி!

பாரதி :

ஆற்று வாரிலே தேற்று வாரிலே
அலறு நெஞ்சினே மாற்று வாரிலே
'காற்றி லேறிஅவ் விண்ணேயுஞ் சாடுவோன்'
கடல்க டந்த நாடுகள் பலவினும்
தூற்று கின்ற உமியெனப் பறப்பதும்
சொந்த நாட்டின் அரசி விருப்பவர்
சோற்றி லான பிண்டங்க ளாயவர்
துயரை நீக்க வழியிலா திருப்பதும்

கண்டு கண்டு வேகிறேன்! தம்பி! இக்
காத கர்தமை நம்பிஎன் பிள்ளேகள்
துண்டு துண்டாய் வீழ்கிருர் பாரடா!
சூழி லங்கை நாட்டினேப் பாரடா!
அண்டை யுள்ள நாட்டினில் சாகிருன்!
அண்ண னேவெறும் மாடுபோல் நிற்கிருன்!
கண்ட துண்டோ எங்கணும், இத்தகு
கைக ளற்ற கோழையர் குழுவினே?

ஆங்கி லர்க்கு வேறொரு நாட்டினில்
அவதி நேர்ந்ததென் றறிந்த வேளேயில்
விங்கு தோளுடன் ஆங்கில நாட்டினர்
வேலெ டுத்துப் பாய்வரே! தம்பிநீ
ஓங்கி நின்ற தமிழரின் பிள்ளேயாய்
உடலெ டுத்தும் என்னடா புண்ணியம்?
பாங்கி லாதவன் பகுத்தறி வற்றவன்
பைந்த மிழ்த்திரு நாட்டினே ஆள்கிருன்!

எண்ண எண்ணத் துடிக்கிற தேயடா!
எந்த நாட்டினில் இந்த அநீதியை
மண்ணில் வீழ்ந்த மழையெனப் போற்றுவர்!
மடையர்! சீச்சீ! தமிழ ராஇவர்?
புண்ணே உண்டு புன்பசி ஆற்றிடும்
புல்ல ரென்று சொல்வதே மெய்ப்பொருள்!
'கண்ணே விற்றுச் சித்திரம் வாங்கி'டும்
கல்வி யற்றவர் தாயகம் தென்னகம்!

வேறு

பாரதி உரைத்த இந்த(ப்)
பாடல்கள் கேட்டேன்! நெஞ்சின்
வேரதிர்ந் ததடா! எங்கள்
வியன்தமிழ் நாடே உன்னேப்
'பாரத'ப் பூசை செய்யும்
பாவிகள் கையி னின்று
கூறுபோட் டெடுத்தா லன்றிக்
குறையற வழியே இல்லே!

கண்ணதாசன்

அந்த அவசரத்திலும் அவளுக்கு ஒரு வேடிக்கையான யோசனை தோன்றிற்று. பொம்மையாவை இழுத்து உட்புறம் போட்டாள். 'பளிச்'சென்று கதவைச் சாத்தினாள். சேலை முந்தானையை எடுத்து, அவன் உடம்பை மூடியபடி அருகில் உட்கார்ந்துகொண்டாள். தூங்கி விழுபவள்போல் பாசாங்கு செய்தாள்.

வந்த காவலர்கள் ஒவ்வொரு அறையாகப் பார்த்தபடி, "என்ன, என்ன" என்று கேட்டார்கள். யாரும் பதில் பேசவில்லை. "வாண்ணேன்! ஏதாவது பாச்சை கீச்சை வந்திருக்கும்! கத்தியிருப்பாங்க! பொட்டைக் குட்டிகதானே!" என்றான் ஒருவன். காவலர்கள் சிரித்துக்கொண்டே அப்புறம் நகர்ந்தனர்.

சுப்பம்மா முந்தானையை எடுத்து, அவன் முகத்தில் விசிறினாள். சிறிது சிறிதாக அவன் உணர்வு பெற்றான். அடி பலமாக இருந்ததால் அவன் சற்று அதிர்ச்சியுற்றிருந்தான்.

"பாருங்க மாமா! நான்தான் சுப்பம்மா! நான்தான் சுப்பம்மா" என்றாள் அவள்.

அவன் கண்களை அகல விரித்தான். அவளைப் புரிந்துகொண்டவன்போலத் தெளிந்தான். "சுப்பம்மா" என்று சத்தமிடப் போனான். 'பளிச்'சென்று அவன் வாயைப் பொத்தினாள் சுப்பம்மா. அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். சுப்பம்மா, கைகளை எடுத்தாள்.

"என்ன சுப்பம்மா இது! நீ ஏன் இப்படி வந்து அகப்பட்டுக் கொண்டாய்?"

"எல்லாம் உங்கள் சிங்கத் தேவரால் வந்தது."

"ஒரு நாளைக்குள் உடம்பு இளைத்துவிட்டதே."

"எல்லாம் உங்கள் ஞாபகந்தான்"-அவள் தலைகுனிந்து கொண்டாள்.

"இன்னும் சில நாட்களில் சிறையை உடைக்கப்போகிறோம்."

"சிங்கத்தேவர் சொன்னார்."

"நான்தான் முதலில் உள்ளே ஓடிவந்து உன்னைத் தூக்கிக் கொண்டு போவேன்."

"இப்போது எப்படித் தப்பிப் போகப் போகிறீர்கள்?"

"இந்த சிப்பாய் உடை!"

"பொழுது நன்றாக விடிந்து விட்டதே! மற்றவர்கள் கண்டு பிடித்துவிடுவார்களே!"

இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால்தான் கண்டுபிடித்து விடுவார்கள். நான் புறப்படுகிறேன்."

அவன் எழுந்தான். அவள் ஆவல் தாங்காமல் "மாமா" என்றாள். 'பளிச்'சென்று அவளை மடியில் சாத்திக்கொண்டு, 'நறுக்'கென்று ஒரு முத்தம் பதித்தான் பொம்மையா. அவள் உதட்டைத் துடைத்துக்கொண்டாள்.

"தைரியமாக இரு! இன்னும் சில நாட்கள்தான்" என்று கூறியபடி, மெதுவாக, கதவைத் திறந்துகொண்டு, அங்குமிங்கும் பார்த்தபடி வெளியேறினான் பொம்மையா. அவள் கதவைச் சாத்திக்கொண்டாள். திறந்து கிடந்த பூட்டை எடுத்து, பூட்டப்பட்ட பாவனையில், கதவில் இணைத்தாள். கம்பிகளின் வழியாக, பொம்மையா எப்படி வெளியில் செல்லப்போகிறான் என்பதைக் கவனிக்க முயன்றாள். அவள் இருந்த இடத்திலிருந்து எதுவும் தெரியவில்லை.

வெளியேறிய பொம்மையா, ஒரு காவலனுக்குரிய கம்பீரத்தோடு, அங்குமிங்கும் பார்த்தபடி நடந்தான். வாசற்கதவருகில் வந்தான். அங்கே நாலைந்து காவலர்கள் நின்றார்கள். திகைத்த பொம்மையா, வேறு புறம் திரும்பி நடந்தான். சிறையின் உட்புறத்தில் செங்குத்தாகக் கட்டப்பட்ட மூன்று, சிறு குகை வாயில்கள் இருந்தன. பயங்கரமான கைதிகளைக் கொல்வதற்கென்று, வெளியில் கூட்டிக்கொண்டு போக அந்த குகைவாயில்கள் பயன்படுவது வழக்கம். உட்புறம் இறங்கி நூறு கெஜ தூரம் சென்றால், ஒரு சிறு கோட்டைக்குள்ளே போய்ச் சேரலாம். உட்புற வாசலுக்கு பலமான கதவு போடப்பட்டிருந்தது. பொம்மையா இவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது அவற்றைக் கண்டதும், இதன் வழியாகப் போய் விடமாட்டோமா என்ற ஆசை தோன்றிற்று. கதவையும் பூட்டையும் கண்ட அவன் மனம், சிறிது தளர்ச்சி உற்றது. என்றாலும் அங்கேயே உட்கார்ந்து கதவைத் திறக்க முயற்சித்தால் வெளியில் இருப்பவர்களுக்குத் தெரியாது என்பதையும் கண்டான். ஏழெட்டுப் படிக்கட்டுகள் உள்ளே இறங்கிய பின்னர்தான் கதவு தெரிந்தது. படிக்கட்டுகளுக்கு மேலேதான் சமதளம். காவலர்கள், சிறையின் வேறு மூலையில் உட்கார்ந்து, தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். பொம்மையா கதவைத் திறக்க முயற்சித்தான்.

அடுத்த இதழில்

நடிகர்

சிவாஜி கணேசன் பற்றி

ஆசிரியர் கண்ணதாசன்

எழுதுகிறார்!

கதவைத் திறந்து விட்டால் அது, ஒரு அபார சாதனை என்றே கருதினான். அவ்வளவு தொல்லைகளை அவன் அனுபவிக்க வேண்டியிருந்தது. இவ்வளவு தூரம் வந்துவிட்டு, ஊமைத்துரையைப் பார்க்காமல் போகிறோமே, என்றும் அவன் கவலைப்பட்டான். ஆனாலும் அதற்காக அவன் மீண்டும் அகப்பட்டுக்கொள்ளத் தயாராயில்லை. பலம் கொண்ட மட்டும் கதவோடு போராடினான். பூட்டை உடைக்க முடியவில்லை. கதவுப் பலகையைத்தான் உடைத்தான். ஒரு ஆள் உள்ளே செல்லக்கூடிய அளவுக்கு இடம் கிடைத்தது. ஆனால், கூர்மையாகச் சில பகுதிகள் நீட்டிக்கொண்டிருந்தன. காயம் படுமென்று தெரிந்தும், துணிந்து உள்ளே புகுந்தான் பொம்மையா.

உள்ளே ஒரே இருள். பாதை தெரியவில்லை. எத்தனை படிக்கட்டுகளில் இறங்கவேண்டும் என்றும் புரியவில்லை. கால்களால் தடவித் தடவி மெதுவாக இறங்கினான். பத்துப் படிகள் இறங்கியதும், சமநிலம் தட்டுப்பட்டது. பொம்மையா சுவற்றைத் தடவிக்கொண்டே நேரே நடக்க ஆரம்பித்தான். அவன் கால்களில் ஏதேதோ பொருள்கள் தட்டுப்பட்டன. அவை என்னவாயிருக்கும்என்பதையே கண்டுகொள்ள முடியவில்லை. ஒன்றைக் கையிலே எடுத்துத் தடவிப் பார்த்த போது, அது ஒரு நகை என்பது தெரிய வந்தது. பொம்மையாவுக்கு ஆசை தாங்கவில்லை. கை கொண்ட மட்டும் சிலவற்றை எடுத்துக்கொண்டான்.

இப்போது சுவற்றைத் தடவி நடப்பது சிரமமாகிவிட்டது. எனினும் தட்டுத்தடுமாறி நடந்தான். சுரங்கப்பாதை ஒரு இடத்தில் வந்து முடிந்தது. பாதை முடிந்ததே தவிர, அங்கே எந்தக் கதவும் இல்லை. "வெறும் நகைகளைப் போட்டு வைக்கிற சுரங்கமோ" எனச் சந்தேகித்த பொம்மையாவின் மனம் மீண்டும் தளர்ந்தது. "அடடா, என்ன முட்டாள்தனமான காரியம்! எதற்காக இவ்வளவு சிரமப்பட்டு இந்தப் பாதைக்குள் இறங்கினோம்!" என்று வருந்தினான். 'ஏதேனும் ஒரு கதவு இருக்காதா' என்று மீண்டும் மீண்டும் தடவிப் பார்த்தான். திடீரென்று ஏதோ ஓசை கேட்டது. சுரங்கத்தின் மேற்புறம் வழியாக வெளிச்சம் தெரிந்தது. பொம்மையா சுவரோடு சுவராக ஒண்டிக்கொண்டான். மேற்புறத்தில் ஒரு கதவு இருந்து திறக்கப்படுகிறது என்பதைக் கண்டான்.

ஏணி ஒன்று உள்நோக்கி வந்தது. பொம்மையாவின் உயிர் நின்றுவிடும் போலிருந்தது. ஒரு ஆண் குரலும், பெண் குரலும் அவன் காதில் விழுந்தன. வந்த வழியே கொஞ்சதூரம் நடந்து இருட்டில் மறைந்துகொண்டான். ஒரு இளைஞனும், இளம் பெண்ணும், ஏணி வழியாக உள்ளே இறங்கினார்கள். பின்னாலேயே ஒரு கை, தீவட்டி ஒன்றை அந்த இளைஞனிடம் கொடுத்தது. பொம்மையாவுக்குத் தான் அகப்பட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றிற்று. ஒரு போருக்குத் தயாரானான். தீவட்டியைக் கொண்டு இளம்பெண்ணும், இளைஞனும் உள்ளே நடக்க ஆரம்பித்ததும், "குபீர்" என்று அவர்கள்மீது பாய்ந்தான் பொம்மையா. அவர்கள் கையிலிருந்த தீவட்டியைப் பறித்து, அவர்கள் முகத்தைச் சுட்டான். அவர்கள் கதறினார்கள். தீவட்டியை அணைத்துவிட்டு ஓடிய பொம்மையா மேலே போகப்போன ஏணியைக் 'கட்'டென்று பிடித்துக்கொண்டான். 'பரபர'வென்று அதிலே ஏறினான். சமதளத்திற்கு வந்தபோது அங்கே ஒரு கிழவி நிற்பதைக் கண்டான். அவள் பொம்மையாவைக் கண்டதும் 'வீல்' என்று அலறினாள். அவளை அடித்துத் தள்ளிய பொம்மையா பாய்ந்தோடினான். கோட்டைக் கதவு திறந்தே கிடந்தது. வெளியில் ஓடி மரங்களுக்கிடையில் மறைந்த பிறகு தான் உயிர் வந்தது.

4

யார் அவர்கள்?

குரலைக் கேட்ட வீரத்தேவன் அதிர்ச்சியடைந்தான். "அது கண்ணாத்தாளின் குரல்! ஆம்! கண்ணாத்தாளின் குரல்"—வீரத்தேவன் திரும்பி படபடவென்று வீட்டிற்குள் வந்தான். சிங்கத்தேவனும் அவன் முகத்தைப் பார்த்தபடி பின்தொடர்ந்தான். "கண்ணாத்தா" என்று சத்தமிட முயன்றான் வீரத்தேவன். அவன் குரல் 'தளதளத்தது. வீரத்தேவனின் கண்களிலே நீர் ததும்பியது.

சிங்கத்தேவன் தன்னை அமைதிப்படுத்திக்கொண்டு, "என்ன வீரத்தேவா!" என்றான்.

"ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! திருநெல்வேலிக்குப் போய்விட்டு வந்து சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு நடந்தான் வீரத்தேவன். அவன் வெளியே போனதும் ஆத்திரமாகக் கதவைத் தாளிட்டுவிட்டு, அறைக் கதவைத் திறந்த சிங்கத்தேவன், "கண்ணாத்தா! கண்ணாத்தா" என்று அலறினான். சுற்றுமுற்றும் பார்த்தான். பதில் இல்லை.

தொடரும்

கவிதையில் மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்ற சொல் தமிழ் மொழியில் வழங்கும் புதிய சொல்லாகும். மறுமலர்ச்சி என்றசொல்லைச் சங்கத் தமிழில் யாண்டும் காண இயலாது. உலக மொழிகள் ஒவ்வொன்றிலும் பல புதிய சொற்கள் தோன்றுவதும் சில பழைய சொற்கள் வழக்கிழப்பதும் மாற்றமுடியாதனவாக இருக்கக் காண்கிறோம். இவ்வாறு புதியன தோன்றலும் பழையன கழிதலும் காலத்திற்கேற்ப, மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டிய தேவைக்கேற்ப நடைபெறும். இந்த அடிப்படையில் தமிழ் மொழியில் அண்மைக் காலத்தில் தோன்றிய சொல்தான் மறுமலர்ச்சி என்பதாகும்.

தெளிவாகக் கூறப் போனால் ஆங்கில மக்களின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட காலத்திற்குப் பின்னால்தான் இச்சொல் தோன்றியிருத்தல் கூடும். ஆங்கிலத்தில்



"Renaissance" என்று கூறும் சொல்லின் தமிழாக்கமே மறுமலர்ச்சி என்பதாகும். ஆனால் ஆங்கிலத் தொடர்பு ஏற்படுவதற்குமுன் தமிழகத்தில் மறுமலர்ச்சியைக் காணவில்லையா? கண்டிருந்தால் எச்சொற்கொண்டு அதைக் குறித்தனர் என்பதற்குத் தமிழ் உலகம் சரியான விடையை எதிர் நோக்கிய வண்ணம் உள்ளது.

ஆங்கிலச் சொல்லின் விளக்கத்தில் "14-16 ஆம் நூற்றாண்டுகளில் நடந்த (ஆங்கில) இலக்கிய கலை புத்தெழுச்சியைக் குறிப்பதாகும்" என்றுள்ளது. இதே போன்றுதான் மறுமலர்ச்சி என்ற தமிழ்ச் சொல்லும் பண்டைத் தமிழகம் தந்த ஒப்பிலா இலக்கியக் கருவூலங்களின் அடியொற்றி இருபதாம் நூற்றாண்டில் இலக்கியத்தில் எழுந்த புத்தெழுச்சியைக் குறிக்கும். கலையில்- பண்பாட்டில் - இலக்கியத்தில் எல்லாம் மறுமலர்ச்சியைக் காண்பது போன்று கவிதையுலகிலும் மறுமலர்ச்சியைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

இருபதாம் நூற்றாண்டு அல்லது ஓரிரண்டு நூற்றாண்டுகட்கு முன் எழுந்த மறுமலர்ச்சியைக் காணுமுன் அதற்குத் தாயகமாம் சங்க இலக்கியங்களையும் அதன்பின் தோன்றிய இலக்கியங்களையும் ஓரளவு கண்டு செல்லுதல் களிப்பூட்டுவதாகும். சங்க இலக்கியங்களனைத்தும் உண்மைச் செய்திகளையும், இயற்கையின் வண்ணங்களையும், வாழ்க்கையின் அடிப்படைகளையும், ஒழுக்கத்தின் திறம்பாட்டையும் விளக்குவனவாகும் அதனால் சங்கஇலக்கியங்களனைத்தும் வெறும் உலகியல் வழக்கே பேசுவன என்று கருதுதல் கூடாது. ஒப்பிட்டுக் கூறுதலே கருத்தாம். கற்பனையைப் புலவர் பெருமக்கள் கொண்டிருந்தபோதிலும் அதில் அளவும் வரையறையும் இருந்தன. மன்னனைப் பாடுவதும், மக்களுள் சிறந்தாரைப் பாடுவதும் மக்களின் அகப்புற வாழ்வைப் பாடுவதும் ஆகப் பல திறப்பட்டனவற்றைச் சங்க இலக்கியங்களில் பரக்கக் காண்கின்றோம்.

ஆனால் அதன் பின்னால் தோன்றிய புலவர்கள் கற்பனையின் எல்லையினைக் கண்டனர். இந்த உலகைப் பற்றிப் பாடுவதுடன் மானசிகமான இன்னொரு உலகைப் பற்றிப் பாடுவதுடன் கற்பனையில் கண்டு களி நடனம் புரிந்தனர். அகத்துடன் ஆண்டவனைப் பாடியதுபோக ஆண்டவனுடன் அகத்தைப் பாடினர். களவொழுக்கத்தில் கற்புநிலையில் புறத்துறையில் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை பேசியவர்களின் பரம்பரை யாக்கை நிலையாமை இளமை நிலையாமை இவற்றில் வாழ்க்கை வகுத்தனர். இந்த நிலை கவி மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் காலம்வரை நீடித்தது.

எனவே, சங்ககாலக் கவிஞர்கட்கும் இடைக்காலக் கவிஞர்கட்கும் எத்தனையோ வேறுபாடுகள் உண்டு. கருத்தில் வேறுபாடு உண்டு. கருத்தில் வேறுபாடு காணவே, கவிதைகளில் வேறுபாடு வளர்ந்தது. கவிதைகளில் பயன்பட்ட சொற்கள் வேறுபட்டன. சமயக் கருத்துக்களைக் கூற நிறைய வடமொழிச் சொற்களைக் கையாண்டனர். தமிழில் அவற்றைக் கூறச் சொற்கள் இல்லாமையால் அன்று இந்த நிலை. பேரறிஞர் டாக்டர் கால்டுவெல் கூறுவது போன்று இந்நிலையைப் பெருமையாகவும், சிறந்ததாகவும் தப்பாகக் கருதினார்கள். எனவே தமிழன்பர்கட்கு, ஓரளவு புரியாத நிலையில் பாடுவதே பெரும்புலவனின் பண்பு என்று எண்ணிய காலம் அது.

இந்த நிலை மாறியது. உலகையும் உலகியலையும் பற்றிப் பாடத்தொடங்கினர். இப்போதுதான் தமிழிலக்கியத்தில் குறிப்பாகக் கவிதையில் மறுமலர்ச்சி தோன்றியது. கடின நடையைக் கைவிடத் தொடங்கினர். எளிமையில்பாடி மக்களின் மனத்தை ஈர்க்க முனைந்தனர். இந்த நிலையில்தான் அருட்சோதி இராமலிங்க அடிகளார் புரட்சியை உண்டுபண்ணினார். கருத்திலே அவர் புரட்சியைக் காட்ட இல்லை; ஆனால் கவிதைப் போக்கிலே புரட்சியைக் காட்டினார். கடுகிச்சென்று பண்டிதர் வாயிலே, உள்ளத்திலே வளர்ந்துநின்ற தமிழ்க் கவிதைகள் பாமரர்கள் மத்தியில் உலவத்தொடங்கின. பண்டிதருக்கே உரிய கவிநயம், கவிதையழகு பாமரர்களின் சொத்தாகவும் மாறத் தலைப்பட்டது.

இந்த நிலையின் வளர்ச்சியை இருபதாம் நூற்றாண்டிலேயே காணலாம். இருபதாம் நூற்றாண்டு புலவர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் அமர கவி பாரதியாராகும். பாரதிசகாப்தம் என்று கூறுமளவுக்கு அவரது கவிகளில் மறுமலர்ச்சியைக் காணுகிறோம். கருத்திலே மறுமலர்ச்சி, கவிதையின் போக்கில் மறுமலர்ச்சி, கவிதையின் ஓட்டத்தில் மறுமலர்ச்சி, வீரத்தின் விளையாட்டு, விடுதலை விருப்பத்தின் வெற்றி முழக்கம், அடிமைத்தனத்தின் அவலநிலை - இவையெல்லாம் அவரது கவிதைகளில் பொங்கி எழுந்தன. எனவேதான் அவரை அமரகவி என்றும் புரட்சிக்கவி என்றும் போற்றுகின்றோம்.

இடைக்காலத்தில் எழுந்த சில சமய நூற்கள் அத்துவைதம் பற்றிப் பேசக் கேட்கிறோம். உலகமே பிரம்மம், நீயே பிரம்மம். பிரம்மம் வேறு ஜீவன் வேறு என்றெல்லாம் பேசும். ஆனால் அவைகளை படித்தால் புரியாத நிலை. இதே கருத்தை பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் தோய்த்துக் காண்பதெல்லாம் நான் என்ற கருத்தில்.

"வானில் பறக்கின்ற
புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும்
விலங்கெல்லாம் நான்
கானில் வளரும்
மரமெல்லாம் நான்
காற்றும் புனலும்
கடலுமே நான்"

—என்றும் பாடினார் பாரதி. உலகமே என்மயம். என்னை நான் விரும்புதல் போன்று உலகையே நான் விரும்புகின்றேன். உலகமும் இவ்வாறு விரும்ப வேண்டும் என்று கூறுகிறார் அவர்.

திருவள்ளுவர் கூறிய கருத்தைப் பின்பற்றிப் பாரதியார்.

"தனி ஒரு மனிதனுக்கு
உணவு இல்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

—என்றார்.

அகம், புறம், பத்துப்பாட்டு போன்றவற்றில் அரசனையோ, தலைவனையோ பாடும்போது அவனது கொடைவளம், இல்லோர் பலரைப் புரக்கும் தன்மை, சோறளித்த பெருமை இவை பற்றியே இயம்புவர். இவ்வுலக வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் நடக்கும் சிறப்பியல்புகளையே குறிப்பிட்டுப் பாடுவர் கவிஞர். அந்த நிலை இடையில் மாறித் தமிழ்க் கவிஞர்கள் சித்தாந்தம், தத்துவம் போன்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு பாடினர். பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வீரத்துக்கும் பண்புக்கும் மதிப்பு இருந்தது. ஆனால் இடைக்காலத்தில் வீரத்திற்கு அத்தனை அளவு மதிப்பு இல்லாதிருந்தது. இந்த உலகத்தில் நாம் நிலையற்றவர்கள் என்ற எண்ணம் எழுந்தது. எனவேதாம் நாம் பலவேறு படைஎடுப்புகட்கு ஆளானோம். சிந்தனையற்று நம் தொல்நிலையறியாது வாழ்ந்தோம். அடிமையாய், ஆளப்படுவோராய், அஞ்சியஞ்சிச் சாவோராய் வாழ்ந்தோம். இந்த நிலை மாற வேண்டும் என்று எண்ணினார் பாரதியார். வீரத்தின் உறைவிடமாக நாம் வாழ வேண்டும் என்று எண்ணினார்.

"வீரர்கள் பிறந்த திந்தநாடு,"
"வயிரமுடைய நெஞ்சு
வேணும்"

என்று பாடி வீரத்தையூட்டும் மறுமலர்ச்சிக் கவிஞரானார் பாரதி.

பண்டைத் தமிழகம் சாதி முறையைக் கண்டதன்று. 'வீட்டுக்கொரு சாதி, தெருவுக்கொரு சாதி' என்ற அவல நிலை அன்று இல்லை. ஆனால் இன்றோ தமிழகத்தில் சாதியின் பெயரால், குலத்தின் பெயரால் குலவும் கொடுமைகள் பலப்பல. இந்த அவல நிலை இல்லையாக வேண்டும் என்று கண்டார் பாரதி. இந்த மறுமலர்ச்சி எண்ணத்தில் எழுந்த கவிதைக் குரல்தான்—

விற்பனையாகிறது

கவிஞர் கண்ணதாசன் எழுதிய
மனம் போல வாழ்வு
விலை ரூ. 1-50.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய
அண்ணா சொன்ன கதை
விலை ரூ. 1-50.

அன்பழகன் "ஆட்சி" அச்சில்
வியாபாரிகளுக்குத் தக்க கழிவு உண்டு.

விபரங்களுக்கு:—
முத்து புத்தக நிலையம்
மேலபுலிவார்டு ரோடு, திருச்சி-2.

"சாதிகள் இல்லையடி பாப்பா!-
குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல்
பாவம்"

—என்றும்

"பார்ப்பானை ஐயனென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே"

—என்றும் கூறியது. இத்துடன் அவர் மனம் அமையவில்லை. உலகமே ஒன்று. அதில் காணும் யாவும் உயர்வு, தாழ்வு அற்றவை. இத்தகைய எண்ணம் வளர வேண்டும் என்று எண்ணினர். அதனுல்தான்—

"காக்கை குருவி எங்கள் ஜாதி
—நீள்
கடலும் மலையும் எங்கள்
கூட்டம்
நோக்கும் திசையெல்லாம்
நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

—என்று கூறினர். எனவே பாரதியார் இருபதாம் நூற்ருண்டில் தமிழ்க் கவியுலகில் பெரும் மாறுதலையுண்டு பண்ணினர். பண்டிதர்களிடையே பயின்று தமிழைப் பாமரர்களிடையே பரப்பினர் பாரதி. எளிமையும், இனிமையும், கருத்தாழமும் கலந்து பாடினர். தனது கவிதா சக்தியனைத்தையும் நாட்டு விடுதலை, பெண்கள் விடுதலை, சமுதாய முன்னேற்றம்போன்ற துறைகட்குச் செலவிட்டார். எனவே தான் நாம் அவரை மறுமலர்ச்சிக் கவிஞர் என்கிறேம்.

பாரதியை எண்ணிய பின்றை அவருக்கடுத்த நிலையில் அமைபவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவரது பாடல்களில் புரட்சியின் வேகம் அதிகம். சமுதாயம் கருத்துக்களைக் கூறும் போக்கே தனியானது. "சொல்லுடா தம்பி" என்று முன்னிலைப்படுத்திப் பாடும்போது வீரத்தின் எல்லையைக் காட்டுகிருர். அந்த வீரம் நாட்டு மக்களிடையே பரவும் வேகமும் அதிகம்.

காதலைப்பற்றிப் பாடும்போது கவிஞரின் கற்பனையும், சொற்றிறனும் சிறக்கின்றன. காதல் வாழ்க்கையைப்பற்றி இவர் பாடியன ஏராளம். காதல் உயிரினங்களின் இயற்கை என்றும் சாதி, மத, குல வேறுபாடு கட்கெல்லாம் அடங்கியிருப்பதன்று என்றும் கூறுவார். சமூகத்தின் மூடப் பழக்க வழக்கங்களை நினைத்துவிட்டால் இவரது நெஞ்சம் பதைபதைக்கும். வேதனை பிறக்கும். அந்த வேதனையின் அடிப்படையில் வீரம் எழும். வீரத்துடன் கவிதையும் வேகத்துடன் வெளியே வரும்.

"காதல் அடைவது
உயிரியற்கை—அது
கட்டில் அகப்படும்
தன்மையதோ ?—அடி
சாதல் அடைவதும்
காதலிலே—ஒரு
தடங்கல் அடைவதும்
ஒன்று கண்டாய்"—

என்று கூறும்போது காதலுக்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பினையும், காதல் நடைமுறையில் வரும் போது ஏற்படும் நிலையினையும் தெளிவாக்குகிருர். இன்னும்—

"வீதியில் பற்பல
வினர்களும் வேறு
விதியற்ற சிற்சில
பண்டிதரும்—வந்து
சாதியிலுன்னை
விலக்கிடுவோம்—உன்
தந்தையின் சொத்தையும்
நீ இழப்பாய்—நம்
ஆதி வழக்கத்தை
மீறுகின்ருய்—தாலி
அறுத்தவளையும் மணம்
ஒப்புகின்ருய்—நல்ல
கோதையொருத்தியை
யாம் பார்த்து—மணம்
கூட்டி வைப்போம்
என்று சத்தமிட்டார்"—

என்று காதலில் அதிலும் விதவையொருத்திமேற் காதல் கொண்டவனுக்கு நேரும் இன்னல்களை இயம்புங்கால் ஏற்படும் சாதி, சமயம் இவற்றின் கொடுமை எந்த அளவுக்குக் குறுக்கிடுகிறது என்பதை மிக எண்மையாகக் காட்டும்போது மறுமலர்ச்சிதான் இது என மகிழ்கிறேம்.

நாட்டு விடுதலைக்குப் புரட்சிக் கவிஞர் பறை கொட்டிய பாரதியைப் போன்றே முழங்கினர் எனலாம். அதனுற்ருன்—

"தனியாண்ட செந்தமிழ்த்
தாய்க்கு—நீ
தலைவன் ! நீதலைவன்
வாளினைத் தூக்கு
இனமல்லடா அவன்;
பகைவன்—இனியும்
ஏமாற வேண்டாம் தமிழா"—

என்ருர் போலும்.
தமிழகத்தையும் தமிழையும் மறந்தார் நெஞ்சில் வாளினைப் பாய்ச்சுகின்ற வன்மையைக் கவிதையில் கண்டவர் பாரதிதாசன். தமிழ் நாட்டைப் பாடும்போது—

"சந்தனம் கமழ் பொதிகை
சந்தப் பறவைகள் பாடல்
சிந்துதேன் பொங்கும் ஆனந்தம்
செந்நெல் வயல்கள்
சிறக்கின்ற நாடு"—

தன்னை ஆட்கொண்ட இயற்கை, செயற்கை வனப்புகளில் திளைக்கிருர் கவிஞர். தமிழைப் பழிக்கின்றவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என வீறுகொண்டு எழுகின்ற உணர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன்.

தற்காலக் கவிஞர்களை எடுத்துக் கொண்டால் ஒரு சிறு குறையையும் காணுகின்றேம். அது காலவெள்ளத்தில் தடுக்கமுடியாத குறையாகும். தற்காலக் கவிஞர்கள் இடைக்காலக் கவிஞர்களையும் மிஞ்சிவிடுகின்றனர். அவர்கள் சமயம், கடவுள் முதலியவற்றிற்காகப் பாடினர். தங்கள் சமயமே சிறந்தது என்று நிலைநிறுத்தப் பாடினர். அதேபோல் தற்காலக் கவிஞருலகம் அரசியற் கட்சிகளுக்காகப் பாடுகின்றது. இந்த நிலை மாற வேண்டும். பொதுநோக்கு கவிஞர்களிடையே உண்டாகவேண்டும். அந்த நிலைவந்தால்தான் தமிழ்க் கவிதையுலகு அனைவிர்க்கும் நல்ல பயனை நல்கும் உலகாகும்.

இறுதியாக, மறுமலர்ச்சி குறித்து ஒன்று குறித்தல்வேண்டும். மறுமலர்ச்சி என்பது எந்த மொழியிலும் உண்டாவது இயற்கை. தமிழ் மொழிக்கு மட்டும் உரியதன்று. மேலும் மறுமலர்ச்சி என்பது அவ்வக் கால மக்களைப் பொறுத்தது ஆகும். இன்று நாம் மறுமலர்ச்சி என்று கூறுவதை வருங்கால மக்கள் மறுக்கலாம். இக்காலப் படைப்புகள் போற்றப்படத்தக்கன அல்ல என்று கூறும் நாட்களும் வரலாம். நாம் எவ்வாறு இடைக்காலக் கவிதையுலகை மறுக்கிருமோ அதுபோன்ற நிலை வருங்காலத்தில் ஏற்படலாம். எனவே மறுமலர்ச்சி என்று கூறுவதெல்லாம் மக்களின் மனப்பாங்கை ஒத்து மாறுபடுவதே ஆகும். இக்காலத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு மறுமலர்ச்சிக்காலம் என்று கூறுவதில் ஐயமிருக்கமுடியாது.

—கதிரவன், பி. ஏ. (ஆனர்சு)

உருவகம் :

தேன் கூடு

ஓங்கி உயர்ந்த அந்த மரத்தின் உச்சியிலே அழகான தேன் கூடு நிறம்மாறித் தொங்கிக்கொண்டிருக்கும் பலாக் கனியைப்போன்று தொங்கிக்கொண்டிருந்தது. கோடிக் கணக்கான தேனிக்கள் அதில் தங்களது கடமைகளிலே முனைந்திருந்தன. தேனிக்கள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்கான மைல்கள் சென்று மலர்த் தோட்டங்கள் தோறும் உலாவி பூக்கள்தோறும் மதுவுண்டு கொண்டு வந்து தேன் கூட்டிலே தேனைச் சேகரித்து வந்தன. அந்தத் தேனிக்களிடையே ஓய்வோ உல்லாசமோ கிடையாது. எல்லாம் கடமை கடமை என்று கடமையைச் செம்மையுறச் செயலாற்றுவதிலே முனைந்திருந்தன. தேன்கூடும் பருத்துப் பெருகி வளர்ந்து உயர்ந்துகொண்டே வந்தது. உழைப்பு உழைப்பு இதைத்தவிர மற்றைய சிந்தனைகள் எதுவும் அவைகளிடத்திலே இல்லை.

காலம் மாறியது; கார்காலம் கடந்தது; வேனிற் காலம் தொடங்கியது. தேனிக்கள் எப்பொழுதும்போலவே உழைப்பிலே இருக்கும் இன்பத்தை எண்ணியபடியே பறந்து திரிந்தன. ஆனல் தற்போது சோலைகள் தோறும் மலர்கள் இல்லை. இருக்கிற மலர்களிலும் தேன்களில்லை. கொஞ்ச நஞ்சம் மலர்களிலே இருக்கிற தேன் துளிகளும் தங்களுடைய வயிற்றுக்குப் போதவில்லை. உழைப்புக்கே வழி இல்லை என்னும் பொழுது என்ன செய்வது என்று அவைகள் கவலைப்படவில்லை. 'எல்லாம் கோடை காலம் போகும் வரைதானே இப்படி, அதற்குத்தான் வேண்டும் அளவுக்கு மேலாகவே கூட்டிலே முன்பே தேனைச் சேகரித்து வைத்திருக்கிறேமே' என்று எண்ணியபடி எல்லா ஈக்களும் தேன் கூட்டை நோக்கிப் பறந்து வந்தன.

கூட்டிலேயோ அவைகள் சேகரித்து வைத்த தேனில் ஒரு துளியைக்கூட காணவில்லை. எல்லா ஈக்களுக்கும் ஒரே சிந்தனை.

அப்பொழுது உழைப்பாளி ஈக்களிலே ஒரு தேனி தங்களைத்தவிர ஒரு கூட்டம் தங்களுக்குத் தெரியாமலே இது நாள்வரை இருந்து வருவதைக் கண்டது. கண்டவுடனேயே தன் ஆத்திரம் திர உரத்தக் குரலில் கூக்குரலிட்டது. 'இதோ பாருங்கள் உழைப்பாளர்களே, இங்கே ஒரு கூட்டம் உழைக்காமலே நாம் சேகரித்து வைத்த தேனையெல்லாம் உண்டு, கொழுத்து உல்லாசமாக இருப்பதை' என்று.

உடனே எல்லா உழைப்பாளி ஈக்களும் ஒன்று திரண்டன. ஒரு தேனி தலைமைவகித்துப் பேசியது; 'நாம் உழைக்க அதை வேறு ஒரு கூட்டம் உறிஞ்சி வாழ்வதா? ஓயாத நமது உழைப்பிலே அந்தச் சோம்பேறிக் கூட்டத்தைப்பற்றி அறியாமலேயல்லவா இருந்துவிட்டோம். இனியும் நமது கூட்டுக்குள்ளே இத்தகையக் கொள்ளையர்களை வைத்திருப்பதாகாது; அது நமக்குத்தான் ஆபத்து' என்றது.

அவ்வளவுதான்... ஒன்று... பத்து... நூறு ...ஆயிரம்... பத்தாயிரம் ..எனக் கிளம்பித் தாக்கின. எதிர்பாராதஇந்தத் தாக்குதலை சோம்பேறி ஈக்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சோம்பேறி ஈக்களின் உருக்கமான வேண்டுகோள்கள் யாவும் உணர்ச்சிகரமான உழைப்பாளி ஈக்களின் போர்க் குரலுக்கு முன்னல் கேட்கவே இல்லை.

—கரந்தை-கணேசன்.

நாட்டுக்கு நாடு அடிமைக் கூட்டம்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய கட்சியின் அமைப்பினையும் அம்சங்களான கொள்கைகளையும் ரஷ்யாவின் எண்ணத்திற்கு ஏற்ற வகையில் தயார் செய்து பழக்கப்பட்டுவிட்டார்கள். நெடுங் காலமாக அவர்களது அரசியல் வாழ்வில் கலந்து ஒன்ருகியிருக்கும் மாஸ்கோ விசுவாசம் அவர்களைச் சொந்த முறையில் செயலற்றவர்களாக்கிவிட்டது. கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவைத் தங்களது வளர்ச்சிக்கு வழிகாட்டியாகமட்டும் கொண்டிருந்தால்கூட இந்தத் திக்கற்றவர்களைப் பற்றி எவரும் கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனல்மாஸ்கோவின் ஆணைகளுக்கு அடங்கும் அடிமை மனப்பான்மையை மிகவும் விரும்பி ஏற்றுக்கொண்ட காரணத்தினுல் தான் பலரின் பழிப்புக்கும்தங்களது பண்புகளைப் பணயமாக்கிவிட்டார்கள். எந்த ஒரு பிரச்னையையும் தங்களது மதிப்பீட்டிற்கு மட்டுமே தகுந்தவை என்று தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். மற்றவர்கள் எது சொன்னுலும் அவர்களுக்குச் சரியான முடிவுகளாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சோவியத் ரஷ்யாவின் நடவடிக்கைகளைப் போற்றிக் கொண்டேயிருக்கும் கம்யூனிஸ்டுகளைப்போலவே இந்திய உப கண்டத்திலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் கானம் பாட வேண்டும் என்பது அவர்கள் கருத்து. அவரவர் சுயசிந்தனைகளுக்கேற்பத் தெரிவிக்கும் முடிவுகளையும் எண்ணங்களையும் சோவியத்திற்கு எதிரான பிரச்சாரம் என்று அவர்களுக்கே உரிய இரவல் புத்தித்தன்மையில் துணிந்து சொல்லத் தயங்கார்!

தென்னை மரத்தில் தேள் கொட்டினுல்

மனித குலத்தின் பெரும் பகுதிக்கு வழி காட்டிய தலைவன் ஸ்டாலின் என்பதை கம்யூனிஸ்டுகள் தங்களது மாஸ்கோ பஜனையின் மூல மந்திரமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். இதைப்பற்றி எவர் கேட்டாலும் இல்லையென்று மறுத்துத் தாங்களும் 'சுயபுத்தி' உள்ளவர்களே என்று உதடுகள் துடிக்க, வார்த்தைகள் குளறக் கூறுவார்கள்! மாவீரன் ஸ்டாலின் மறைவுக்குப் பின்புதான் கொஞ்சம் உரத்த குரலில் தங்களது உள்நாட்டுப் பணியினையும் பற்றுதலையும் பறை சாற்றிக்கொண்டார்கள். விடுதலை வீரனுக-லெனினுடைய நேர் வாரிசாக வர்ணிக்கப்பட்ட ஸ்டாலினை-ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது மாநாட்டில்-அதிகார வெறியனுக, கொலைகாரனுக, வஞ்சகனுக, வர்க்கப் போராட்டத்தின் விரோதியாக, அறிமுகப்படுத்தி வைத்தார் - இன்றைய பிரதமர் நிகிடிவ் குருசேவ்! உலகம் அவருடைய சேதிகளைக் கேட்டுத் திகைத்துப் போயிற்று!

இந்தியக் கம்யூனிஸ்டுகள்பாரதப் பண்பாட்டினைப்பற்றிப் பல்லவிப் பாடிக்கொண்டிருப்பவர்கள் - குருசேவின் குற்றச் சாட்டுக்களைப்பற்றி எந்தவிதமான அறிக்கையும் தர முடியாமல் கம்யூனிஸ்டுக் கட்சி அலுவலகத்துக்குள்ளேயே அடைபட்டு-மாஸ்கோவிலிருந்து உத்திரவு வருகின்ற தேதியையும் - அதற்கேற்ப ஒலிபரப்பவேண்டிய செய்திகளையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் - 1956ல்! இந்த "அண்டர் கிரவுண்ட்" அலங்கோலத்தை அறிந்துகொண்ட தோழர் ஜெயப்பிரகாசர் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தன்மான உணர்ச்சியை எடை போட்டுப் பார்க்க விரும்பினுர். இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு அவசர அவசரமாக அன்புக் கடிதம் அனுப்பினுர். கம்யூனிஸ்டுகளின் கடந்த கால மாஸ்கோ விசுவாசத்தை மக்கள் மன்றத்திற்கு எடுத்து வைத்த பெருமை அந்தக் கடிதத்திற்கு உண்டு! கம்யூனிஸ்டுகள் காமிர்ன் பாரத்தின் கட்டளைக்குக் கீழ்படிபவர்கள்-ஏவலுக்குச் சலாம் போடுபவர்கள் என்பதைக் கட்சியின் செயலாளர் அஜாய்கோஷ் அவர்களே ஒத்துக்கொள்ளும் நெருக்கடியான நிலையைத் தோற்றுவித்தார் தோழர் ஜெயப்பிரகாசர்! தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தாங்கள் தான் தமிழகத்தின் தவப் புதல்வர்கள்- விடுதலை வரலாறு படைக்கும் குணக் குன்றுகள் கொள்கை வீரர்கள் என்று மேடையதிர முழக்கமிடுவதெல்லாம் எவ்வளவு கேலிக்குரியவை என்பதை ஜெயப்பிரகாசர்-அஜாய்கோஷ் கடிதத் தொடர்புகள்-நமக்கெல்லாம் மிகமிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றன. திரு. குருசேவ் வெளியிட்ட தகவல்கள் ஒரு தலைமுறைக் காலம் பூராவும் கடவுள் தன்மைக்கு உயர்த்தப்பட்ட ஒரு தலைமையால் செய்யப்பட்ட பயங்கரக் குற்றங்களை - அதிகாரப் பூர்வமாக இன்று ஒப்புக் கொள்ளப்பட்டவையாகும். "எங்களிடத்தில் நீங்கள் விற்க முயன்ற அருவறுக்கத்தக்க விஷயம் இது தானு என்று எங்கும் மக்கள் கேட்பது நிச்சயம். **குருசேவ் வெளியிட்டவை புதுமையானவையல்ல; கம்யூனிஸ்டுகளுக்குக் குறிப்பாகத் தலைவர்களுக்காகிலும் இவை தெரிந்திருக்க வேண்டும். அவ்விதமாயின் ஏன் இத்தனை காலம் மௌனமாயிருந்தனர்? மாஸ்கோவில் தயாரான குதிரைக் கவசத்தைக் கம்யூனிஸ்டுகள் மீண்டும் போட்டுக்கொண்டு அதன் எல்லைக்கு அப்பால் பார்க்க மறுப்பார்களா? உலக கம்யூனிஸ்டுஇயக்கத்திற்கு மீண்டும் புதுவிதமான பொய்கள் வழிகாட்டியாக விளங்கப் போகின்றனவா? இந்தியக் கம்யூனிஸ்டுகளின் சுதந்தரப் பார்வையை வற்புறுத்துவார்களா? உண்மையைப் பார்க்கத் தவறுவது ஏன்?"**

இந்தியக் கம்யூனிஸ்டுகள் உண்மையில் மாஸ்கோ தாசர்களாக இருக்கவில்லையென்ருல் இந்தக் கேள்விகளை மறுப்புரைகளால் உடைத்தெறிந்திருக்க முடியும் - ஆனல் - அவர்களுடைய நாக்குகள் - மாஸ்கோவில் இழுத்துக் கட்டப்பட்டிருந்த காரணத்தால் பதில் கூறமுடியாமல் வெட்கித் தலை குனிய வேண்டி நேரிட்டது. வெளிநாட்டுக் கட்டளைகளுக்குக் கட்டுப் படாதவர்கள் கம்யூனிஸ்டுகள் என்ருல் - ஜெயப்பிரகாசரின் கண்டன உரைகளை எதிர்க்காதது ஏன்? அவர் சாதாரண நடையிலே கேட்கவில்லை. கம்யூனிஸ்டுகளின் அந்தரங்க விவகாரங்களையெல்லாம் அம்பலத்திற்கு அழைத்து வரும் வகையில் அறைகூவலாகவே கேள்விகளைக் கேட்டார்! அவரது கடிதத்தின் இன்னெரு பகுதியில் "**மற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகளைப்போலவே இந்த தேசத்திலுள்ள கம்யூனிஸ்டுகளும் மாஸ்கோவின் கைப் பாவைகளாக ஆடி தங்களைப் பிறர் எள்ளி நகையாடும் விதத்தில் நடந்து கொண்டுள்ளனர். ஆனல்இன்று கம்யூனிஸ்டு ஜன்னல்களிலிருந்து சமத்துவம் - சுதந்தரம் - தேசிய உரிமை என்ற ஆரோக்கியமான காற்று வீசுகிறது-இது உறுதியான உண்மையென்ருல் இந்தியக் கம்யூனிஸ்டுகள் மாஸ்கோவிற்கு உட்படாத சுதந்தரமானவர்கள் என்பதைப் பிரகடனம் செய்யத் தயாரா?**"—இப்படிக் கேட்டார்!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் இந்தக் கேள்விகளைப் பொறுமையுடன் கேட்டார்கள் - தமிழ் நாட்டுக்குக் கம்யூனிஸ்டுகளுக்குத்தான் பதிலளிக்கும் தகுதியும் திறமையும் கிடையாதே - புதுடில்லி அஜாய் கோசுக்கள்தானே பிரதம பூசாரிகள் - அவர்களின் அறிக்கையை இந்தப் பகுதி ஜனசக்தியார்கள் ஆவலுடன் இதயம் நொந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது கேட்டால் எப்போது நாங்கள் ஏங்கித் தவித்தோம் என்று ஓடுகிற ஓட்டத்திலும் தடுமாடுகின்ற வேகத்திலும் மறுத்துவிடுவார்கள் - அன்

பனைமரத்தில் நெறி கட்டுமாம்!

றைக்கு ஜெயப்பிரகாசர்கள் கேள்விக் கணைகளைத் தந்தபோது தமிழ் நாட்டுப் பெருந் தலைகள் தயாரானதுண்டா? அவர் துருவித் துருவிக் கேட்டார். "**வார்த்தைகளைப் போட்டுக் குழப்பாமல் இனிமேல் சுதந்தரமாக இயங்குவோம் என்று பிரகடனம் செய்ய வேண்டும். கம்யூனிஸ்டுகள் தங்களது நடைமுறைகளைமாற்றிக்கொள்ள வேண்டும். கடந்த காலத் தவறுகளை ஒப்புக்கொள்ள வேண்டும். பகுத்தறிவுள்ள எவனும் -கம்யூனிஸ்டுகளை மதிக்க வேண்டுமானுல் - இவைகளுக்குத் தக்க பதில் தரத் தலைவர்கள் தயாரா?**"—என்பதாக!

இந்தியக் கம்யூனிஸ்டுகள் தங்களைப்பற்றி தோழர் ஜெயப்பிரகாசர் இவ்வளவு துணிவோடும் -தலை நிமிர்ந்த நோக்கத்துடனும் கேட்ட கண்டனக் கேள்விகளை என்றைக்கும் எதிர்பார்த்துக்கொள்ளவில்லை! இதைத் தெரிந்திருந்தால் எத்தனையோ விடைகளைத் தேடிச் சேகரித்து வைத்திருப்பார்கள்இந்த அரசியல் விற்பன்னர்கள்; புது உலகத்தின் சுதந்தரச் சிற்பிகள்! ஆனல் கம்யூனிஸ்டுகளின் காலைப் பிடித்து இழுத்து இந்திய உபகண்டத்து மக்களிடையே அவர்களது மேனியிலே படிந்துவிட்ட அயல் நாட்டுக் கட்டளைகள் என்னும் களங்கத்தைக் காட்டிக் கொடுத்தார் ஜெயப்பிரகாசர்! கம்யூனிஸ்டுகள் இன்றைக்குத் தத்துவார்த்தம் பேசுகிருர்கள். லெனின்-மார்க்ஸ் ஏங்கல்ஸ்- என்று தினமும் போற்றுகிருர்கள். 36 கோடி மக்களின் ஏகப் பிரதிநிதிகள் - டெல்லி செங்கோட்டை இனி எங்களுடையது தான் என்று அடிக்கடி சொல்லிச் சொல்லி மகிழ்ந்துகொள்கிருர்கள். இவர்களின் அரசியல்விளையாட்டுக்களின் அலங்கோலத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் நம்பிவிடுகிருர்கள்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'பொதுக் காரியதரிசி' அஜய்குமார் கோஷ் என்பவர் ஜெயப்பிரகாசரிடம் சரணடைந்தார் என்று நான் சொன்னுல் சங்கரய்யா போன்ற சத்தியசிலர்களுக்குச் சங்கடமாகத்தான் இருக்கும். எனவே அஜய் அன்று சொன்னதைக் கேளுங்கள். இன்னும் கேளாக் காதினராக உள்ள தமிழ்நாட்டுப் 'புரட்சியின் பிம்பங்கள்' அவசியம் காண வேண்டுமென்பதற்காகவே எடுத்துக் காட்டுகிறேன்.

"சோவியத் யூனியனில் உள்ள சகலத்தையும் லட்சிய கீதமாகப் பார்த்தது தவறு என்பதைஒப்புக் கொள்கிருேம். சோஸலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளல்லாத ஜனநாயக வாதிகளும் சோவியத் யூனியனைக் குறித்து செய்து வந்த விமர்சனத்தின் பால் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுவது அவசியம். எங்களிடையிலும் இதர கம்யூனிஸ்ட் கட்சிகளிடையிலும் சோவியத் யூனியன் செய்வதையெல்லாம் ஆதரிக்கும் போக்கு வளர்ந்தது. ஏதாவது ஒரு அம்சத்தை எவராவது விமர்சனம் செய்தால் அவரைக் கண்டிக்கும் போக்கு இருந்தது என்பதை இப்போது ஒப்புக் கொள்கிருேம். இந்தப் போக்கு கம்யூனிஸ்ட், சோசலிஸ்ட் ஐக்கிய லட்சியத்திற்கு மட்டுமல்ல, சோசலிஸ்ட் லட்சியத்திற்கே விளைத்துள்ள பாதகத்தை ஆழமாக உணர்கிருேம். இந்தப் போக்குகளையும் தவறுகளையும்

கவிஞனின் வேலை

கவியென்று நாம் கௌரவிக்கும் ஒருவனிடத்தில் உள்ள சிறப்பு என்னவென்ருல், நாம் சொல்ல விரும்புவதையெல்லாம் அவன் ஒருவனே அழகாகச் சொல்லிவிடுகிருன். ஆகவே, தன் விருப்பப்படி பேச நாம் அவனுக்கு சுதந்திரம் கொடுத்தால், அவன் எல்லாருடைய பாவனைகளையும் தெளிவாக வெளிப்படுத்தமாட்டான். சந்தைக்கடை இரைச்சலிடையே பிறந்த இலக்கியம் அந்தக் காலத்துப் பொதுமக்களின் மனேபாவனைகளைப் பிரதிபலிக்கிறதென்பது உண்மை. அந்தக் காலத்தவர் தலையசைத்துச் சுவைத்தபோதிலும், அந்த இலக்கியம் நமக்குத் திருப்தி தருவதில்லை. இலக்கியத்தை உறைகல்லில் இட்டுத் தேய்த்தால், அதன் உயர்வும் தாழ்வும் வெளிப்பட்டுவிடும். அற்புதமாகத் தோன்றும் ஓர் இலக்கியம் எண்ணில் ஒன்றேயானுலும், அது ஆயிரம் சாரமற்ற எழுத்துக்களுக்கு மேலாகவே நிற்கிறது. — தாகூர்

★ மாஸ்கோவை நம்பி மதியிழந்தவர்கள் ★

கைவிட உறுதிகொண்டிருக்கிருேம் !''

இந்தியக் கம்யூனிஸ்டுகளின்கண்மூடித் தன்மையை கருத்தற்ற செயல்களை - கண்ணியமிழந்த காரியங்களைக் கணக்கெடுத்துக் காட்டினர், தோழர் ஜெயப்பிரகாசர். அவர் கூறியவைகளையெல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டு, ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருக்கிருர் அஜய்குமார் கோஷ் ! அவர் தந்துள்ள பதில் கடிதம் கம்யூனிஸ்டுகள் மாஸ்கோவின் எடுபிடிகள் என்பதை உறுதிப்படுத்திக் காட்டுகின்றன. எந்த ஒரு கொள்கையையும் இலட்சியத்தையும் சொந்த அறிவில் சிந்தித்துப் பணியாற்றவில்லை - மாஸ்கோ சொன்னதே சட்டம் - அதற்குக் கீழ்படிவதே இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடமை என்பது தான் உண்மையாகும் ! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு அஜய்கோஷின் முன்னைய விளக்கம் புரியாமல் இருப்பின் அவர்களை அன்புடன் அழைக்கிறேன். கீழே தந்துள்ள குறிப்பையும் - காணும்படி வேண்டுகிறேன். "சர்வ தேசியத்தைப்பற்றி எங்களுக்குத் தவருன கண்ணேட்டம் உண்டு. பல குறைபாடுகளில் குறிப்பாக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இதர கம்யூனிஸ்டு கட்சிகளுக்குமிடையே இருக்க வேண்டிய உறவுகளில் பல குறைபாடுகள் இருப்பது உண்மையே. இதற்காக நாங்கள் வெட்கப்பட வேண்டுமா ? அந்த உறவையும் நிராகரித்துவிட வேண்டுமா ?''—சொந்த நாட்டுப் பற்றும், சோபிதமான கொள்கைத் தெளிவும் வைத்துக்கொண்டுள்ளதாகப் பண்ணிசைக்கும் ஜீவானந்த பாகவதர்கள் இதற்கென்ன பதில் சொல்லப் போகிருர்கள் ! ரஷ்ய உறவைப்பற்றிப் பேச வெட்கப்பட மாட்டார்களாம் - சொல்வது கட்சியின் காரியதரிசி— தமிழ்நாட்டுக் காரியதரிசிக்கு வெட்க உணர்வு உண்டா ? பெரிய காரியதரிசிக்கே இல்லாதபோது சின்னவரைப்பற்றி கேட்கலாமா என்பதுதான் கம்யூனிஸ்டுகளின் பதிலுரையா ? அறிஞர் அண்ணுத்துரை அவர்களின் அருமையான கொள்கை விளக்கத்தை ஒலியும் எதிரொலியும் என்று நிந்திக்கும் ஒலியுணர்ச்சியே இல்லாதவர்கள் - தாங்கள் வெளிநாட்டு வேவுகாரர்களே தவிர இலட்சிய வாதிகளல்ல - இந்தியக் கம்யூனிஸ்டுகள் என்ருல் மாஸ்கோவுடன் உறவுகொண்டாடும்செல்லப் பிள்ளைகள்தான் என்பதை இப்போதாவது மறைக்காமல் தமிழகத் தவருக்குச் சொல்லத் துணிவுண்டா ?

இந்தியக் கம்யூனிஸ்டுகளை மாஸ்கோவின் ஒலி பெருக்கிகள் என்ருர்கள் - இழிவாகப் பேச விரும்பியவர்கள் மாஸ்கோ கூலிகள் என்ருர்கள் - திராவிட முன்னேற்றக் கழகத்தவர் ரஷ்யாவின் புது வாழ்வை மதித்தவர்கள் - கம்யூனிஸ்டுகளைப்போல் அடிமைகளாக எழுதிக் கொடுக்காதவர்கள் - உண்மையில் வருந்திேனும். ஆனல் கம்யூனிஸ்டுக் கட்சியின் எதிரிகள் சொன்ன குற்றச்சாட்டுக்களை அஜய்கோஷ் ஏற்றுக்கொண்டுள்ளதை எண்ணும்போதுதான்- என் போன்ருர் எப்படியோ ஏமாந்துவிட்டதை உணர்கிருேம். "சோவியத் யூனியன்பால் எங்கள் கண்ணேட்டம் சரியல்லதான். சோவியத் யூனியனின் சோசலிசசாதனைகளை ஆதரித்து அவைகள் உன்னதமானவை என்று போற்றிப் புகழும் அதே சமயத்தில் சோசலிஸ்ட் ஜனநாயகத்தின் கோட்பாடுகளை மீறக்கூடிய வகையில் கடைப்பிடிக்கப்பட்ட முறைகளையும், கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் குற்ற விமர்சனம் செய்திருக்க வேண்டியது எங்களுடைய கடமையாகவும் பொறுப்பாகவும் இருந்தது. அதை நாங்கள் செய்யவில்லை. இன்னும்கூட நாங்கள் சோவியத் யூனியனைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி வருகிருேம். அதற்கு அங்கேரிப் பிரச்னை ஒரு உதாரணம் - அது எங்கள் மனப்பூர்வமான நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது'' — ஜெயப்பிரகாசரின் கேள்விக்கு இவ்வளவு விளக்கமாகத் தோல்வியைஒப்புக்கொண்டு பதில் தந்த கம்யூனிஸ்டுகள் - தாங்கள் சந்திக்கும் பொதுமக்களிடத்திலே இந்த உண்மைகளை என்றைக்காவது எடுத்துக் கூறியதுண்டா ? பாட்டாளிக் கட்சியினர் பரிதாபமாகப் பதுங்கிக்கொள்வதுதான் கம்யூனிஸ்டுகளின் கடைந்தெடுத்த முற்போக்குத் தன்மையா ? விளக்கம் கேட்ட மாற்றுக் கட்சியினரைத்தான் மதித்ததுண்டா ? "சோஷலிஸ்ட் அம்சங்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் இயல்புக்கேற்ப மாறும் - என்ற மார்க்ஸிஸ - லெனினிஸக் கோட்பாட்டின்படி நடக்கத் தவறியது கடந்த காலத்தில் எங்களுடைய மிகக் கடுமையான தவறுகளில் ஒன்று - இதை உணருகிருேம் - திருத்திக்கொள்ள எல்லாமுயற்சிகளும் செய்து வருகிருேம்''— அஜய்கோசின் இந்த வாக்கு கம்யூனிஸ்டுகள் இன்னும் லெனினிசம்-மார்க்சிசம்பற்றிப் பேசுகின்ற போலித் தன்மையைத்தான் நமக்குப் புலப்படுத்துகின்றது. கம்யூனிஸ்டுகளின் இலட்சியப் பிடிப்பும்-மார்க்சியப் பண்பும் - மக்களை ஏய்க்கச் சொல்லுகின்ற மயக்க மொழிகள் என்பதை இனியாவது ஏற்றுக்கொள்வரா ?

இந்தியக் . கம்யூனிஸ்டுகள் - தலைமைப் பீடத்திலேயிருப்பவர்கள் குருட்டுத்தனமாக சோவியத் யூனியனைப் பின்பற்றுவதாக ஒப்புக்கொள்கிருர்கள். ஆனல் சொந்தக் கட்சியினரிடையே தங்கள் தவறுகளைச் சொல்ல வெட்கப்படுகிருர்கள். வேதனையைக் குறைத்துக்கொள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது பார்வையைத் திருப்பி, கம்யூனிஸ்டுக் காரியாலங்களில் மட்டுமே காணக்கூடிய சொற்களை விசுகிருர்கள். மாஸ்கோவின் கட்டளைக்கு போலந்துப் பிரதமர் கோமுல்கா தலைவணங்க மறுத்தார். இந்தியக் கம்யூனிஸ்டுகள் கண்டிக்கத் தவறவில்லை ! கோமுல்காவை மிரட்டிப் பார்த்து-அவர் அடக்கமுடியாதவர் என்பதைப் புரிந்துகொண்டபின் - சமாதானம் பேசி ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் மாஸ்கோ மூலவர்கள்-புதுடில்லிக் கம்யூனிஸ்டுகள் ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக்கொண்டு - கோமுல்காவிற்கு பாராட்டும் - குருசேவின் திறமைக்குப் புகழுரையும் தந்தார்கள் ! அங்கேரியிலும் - இம்ரே நாகியைப்போல் ஒரு இணையற்ற தலைவன் இல்லையென்று பேசியவர்கள்-குருசேவ் - இம்ரேநாகியின் பதவியை ஒப்புக்கொண்டிருந்த காலம்வரை ! மாஸ்கோவின் ஆசைகள் எல்லாம் அங்கேரி மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கவேண்டும் என்ற கொடுங்கோன்மையை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தபோது-ரஷ்யாவின் இரும்புக்கரங்கள் அங்கேரி மக்களை வேட்டையாடத் துணிந்தன. 'நம்முடைய' கம்யூனிஸ்டுகளும் அங்கேரி மக்களைச் சுட்டுக்கொல்வது ஒரு சுதந்தரக் கடமையென்று தங்களின் தீராத மாஸ்கோ விசுவாசத்தைக் காட்டிக்கொண்டார்கள் ! யூகோ நாட்டுப் பிரதமர் மார்ஷல் டிட்டோ மாஸ்கோவை என்றும் மதித்ததில்லை. அவரை அடிபணியச் செய்ய ஸ்டாலின் செய்த சதிகள் பலன் தரவில்லை ! குருசேவ்-புல்கானின் இரட்டையர்கள் அவருடன் காதல் நாடகமாடினர். நம்ப மறுத்துவிட்டார் அந்த நல்லவர் ! குருசேவ் வெளிப்படையாகவே டிட்டோவைக் கண்டித்தார். உலகக் கம்யூனிஸ்டுகள் அனைவரும் டிட்டோவைக் குறை கூறினர். இந்தியக் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குள்ள அடிமைத்தனம்-மாஸ்கோவுக்கு மண்டியிடும் மட்டரக மனப்பான்மை மார்ஷல் டிட்டோவுக்கு இல்லையென்று வருத்தப்பட்டுக்கொண்டே தங்களுடைய கண்டனங்களைக்கூறினர். மாநாட்டுக்கு அனுப்பிய வாழ்த்துரைகளைக்கூட மாற்றிக்கொள்ளும் அளவுக்குத் தங்கள் குருவான குருசேவுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்கள். ஜவகர்லால் நேருகூட இதைக் குறிப்பிட்டு கம்யூனிஸ்டுகளின் ரஷ்ய விசுவாசத் தன்மையை நகைக்கத்தக்க வகையில் பேசினர் !

—கூடலரசன்

எமது அடுத்த அற்புத வெளியீடுகள் !

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி,
தஞ்சை மாவட்டங்களுக்கு

பத்மினி பிக்சர்ஸ்

சபாஷ் மீனு

நடிகர்திலகம் சிவாஜி கணேசன், சந்திரபாபு, டி. பாலசுப்பிரமணியம், வி. ஆர். இராசகோபால், பி. ஆர். பந்துலு, மாலினி, சரோஜாதேவி மற்றும் பலர் நடித்தது.

டைரக்ஷன் : பி. ஆர். பந்துலு

ஸ்டுடியோ : பரணி

★

இந்தியாவில் முதன்முதலாக வனவிலங்குகளுடன்
தயாரித்த முழுநீள கேவாகலர் சித்திரம்

பசந்த் பிக்சர்ஸ்

ஜிம்போ

தயாரிப்பு & டைரக்ஷன் : ஹோமி வாடியா

தந்திரக் காட்சிகள் : பாபுபாய் மிஸ்திரி

சங்கீதம் : சித்திரகுப்தா

அஜந்தா பிக்சர்ஸ்
திருச்சி

Aykan

வெண்பாப் போட்டி

25. சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

ஆப்பியது பூத்த அடுப்பேதான் கண்டாலுந்
தீம்புதனை யெண்ணுத் தமிழகமே—சாம்போதும்
மங்கலிலா மாத்தமிழன் மானமதைச் சுற்றுதே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—வி. பாலசுப்பிரமணியன், சென்னை.

பாழ்நிலத்தைப் பண்படுத்திப் பல்லுயிரைக் காத்ததற்கோ
வாழ்விழக்கச் சொல்கின்றார் வன்னெஞ்சர்?—கூழ்தந்த
எங்களவர் நெஞ்செரியச் செய்ததுவே ஈழத்தில்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—நிலவுச்சிரிப்பன், சேலம்-2.

ஆழித் திரைகடந்து அத்தான் பொருளீட்டப்
பாழும் இலங்கைக்குப் போனாரே—தோழிஎன்
அங்கம் துடிக்குதடி அத்தானை உண்டதுவோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—பாப்பா, காமாட்சிபுரம்.

செத்து மடிந்திட்டார்; செந்தழலில் வெந்திட்டார்
சொத்தை இழந்தார்; சுகமிழந்தார்;—இத்தரையில்
தீங்கறியா எந்தமிழர் தீங்குற்றார்; காரணமோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ஆர். எம். அலியார், முதுகுளத்தூர்.

முன்னம் உணர்ந்தானை முப்பொருள் கண்டானை,
கன்னல் மொழியானைக் கற்புநலம்—சொன்னானை,
சிங்கத்தை வென்றடக்கும் தென்னவனை என்செய்யும்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—சிந்தாமணி, கருப்பட்டிபாளையம்.

அத்தானேன் வாட்டம்தான்! என்றாய்; அழகரசி
நித்தம் தமிழர் நிலைகுலைவு—சித்தத்தில்
பொங்குவதே போதாது; மேலும் பொசுக்கிடுதே!
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—மு. கோவிந்தராசன், ஆம்பூர்.

பண்டாதான் ஓட்டுகின்றார் பாராண்ட எம்மினத்தை
பண்டிதரோ இல்லையிடம் என்கின்றார்—வண்டமிழே
சங்கம் வளர்த்திட்டோர் சாகின்றார் ஈதெல்லாம்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—மு. தமிழரசு, திருப்புத்தூர்.

சுற்றி எரியுதடா சூழ்ச்சியினால்; தாயுள்ளம்
பற்றி எரியுதடா டண்டமிழா—சுற்றிவந்து
எங்கென்று கேட்கின்றாய் லங்கையிலே தோன்றுதுபார்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—கே. பொ. அரங்கநாதன், கீழ்பென்னாத்தூர்.

ஞாலத்தா ரேத்த நடுநிலை கொண்டீரோ?
சீலத்தின் நேருவே! கண்திறவீர்—ஈழத்தில்
எங்களவர் மானத்தை என்போ டெரிக்குதே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—கமல-சுப்பிரமணியம், பிளபேடு.

வேகுதே வெந்தழலில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே செந்தமிழர் அங்கமெலாம்—பாகுமொழி!
சங்கத் தமிழ்மொழியைச் சாடுதே; வெங்கொடுமைச்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ம. நா. வெள்ளையன், மலையாண்டிபட்டணம்.

சிங்கத்தைத் தாக்கவந்து சீரழிந்த சிற்றெலிபோல்
சங்கத் தமிழ்தீண்டிச் சாகாதீர்!—எங்குமுள
எங்களவர் பொங்கினால் என்செய்யும்? ஈழமதில்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—அரிமழம் கரு. செல்லமுத்து, திருக்கோகர்ணம்.

பாழ்பட்ட ஈழத்தைப் பாரறிய வைத்தயினம்
தாழ்வுற்று வீழ்ந்தே தவிக்கின்றார்—மாள்கின்றார்
வங்கொடுமை நல்லினத்தின் வாழ்வை எரிக்கிறதே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—அ. ப. சுப்பிரமணியன், காரைக்குடி.

எங்கும் புகழ்மணக்கும் எம்தமிழர் வாழ் பிடத்தில்
சங்கு ஒலிக்கிறதே! சாவிற்கு—மங்காத
தங்கத் தமிழ்ப்பெண்கள் தாலியறச் செய்ததுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—பொருவள்-கணேசன், அண்ணாமலைநகர்.

ஈழத்தார் வாழ்வை எரிக்குந்தீ; செந்தமிழ்த்தாய்
வாழ முடியாமல் வாட்டுந்தீ;—சூழ்ந்தெழுந்த
சிங்கத் தமிழர்தம் சீற்றத்தில் மாயுந்தீ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—செந்தாமரை, ஆத்துப்பொள்ளாச்சி.

காடு மலைதிருத்திக் காலமெலாம் பாடுபட்டு
நாடு வளஞ்செய்த நந்தமிழர்;—வாழ்வழிக்கப்
பொங்கிப் பெருகுதடி பொல்லா இனவெறியாம்
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—க. இன்பவல்லி, சுந்தராபுரம்.

வந்தாரை யெல்லாம் வரவேற்று வாழ்வளித்த
செந்தமிழர் வாழ்வைச் சிதைக்கின்றார்.—கொந்தளிக்கும்
வெங்கடலாம் நம்படைமுன் எங்கொளித்துப் போவதுவோ
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—சி. சிவராமலிங்கம், சென்னை.

தமிழ்மீது வைத்த தீ! தான் உழைத்(து) உண்ணும்
அமுதுமேல் வைத்த தீ! ஆறுதே!—அமைதியுடன்
எங்களவர் வாழும் "இலங்கைத் தமிழகத்தில்,"
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ஆதவன், பம்பாய்-38.

கூரைகள் வேகக் குழந்தை உடல்வேக
நீருகுக்கும் செந்தமிழர் நாவேக—ஊரையே
வெங்கொடுமைச் சாக்காடாய் மாற்றியதே, நஞ்சனைய
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—ந. அலி, துறையூர்.

கொஞ்சுதமிழ் போற்றும் குடிமக்க ளெல்லோரும்
பஞ்சமெனும் துன்பப் படுக்கையிலே—தஞ்சுகையில்
பொங்கியெழும் கோரப் புயற்காற்றாய் வீசியதே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

காவலர்க்குக் கண்ணொளியே! தீஞ்சுவையே! கற்கண்டே
பாவலர்க்குத் தேன்பாகே! பைந்தமிழே!—காவியமே
தூங்கும் துரைத்தனத்தார் சிந்தையிலும் தீண்டலையா
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

முத்தரசு, கிருட்டிணாபுரம்.

புத்தநெறி போற்றும் பொன்னிலங்கை நன்னாட்டில்
அத்தமித்து விட்டதோ அன்பொளிதான்—முத்துமுத்தாய்
அங்கமெலாம் நோக உழைத்தாரைக் கொன்றதுவே
சிங்களவர் மூட்டிவிட்ட தீ.

—குகன்குருசாமி, கமுதி.

ஜூபிடர்
அண்ணபத்தி
JUPITER PERFUMERS
CITY M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு